திராவிடநாடு

18—10—59 | வார வெளியீடு | விலை 16 காசு.

விலங்கொடிப்பாய்!

—[நா. இளங்கீரன்]—

திக்கற்றோர் திசையற்றோ ரெல்லாம் இன்று
திருநாடு பெற்றதனால் தமிழா! உன்றன்
மிக்குபுகழ் நாடடைய எழுந்தே ஒன்றாய்
மேதினியில் ஆர்த்தெழுந்து விலங்கொ டிப்பாய்!

சாக்கடையில் நெளிபுழுவோ? வீதியோரச்
சகதியிலே விளையாடும் விலங்கோ? என்று
தீக்கனலை விழியோரம் தேக்கி உன்றன்
திருநாட்டை மீட்டிடவே விலங்கொ டிப்பாய்!

மண்ணுக்கும் விண்ணுக்கும் தொலைவே னென்று
மாளாத பிணக்குவியல் அடுக்கி, ஏணி
விண்ணுக்கு வைக்கின்ற அரசு தன்னை
வியன்புவியில் அடக்கிடவே விலங்கொ டிப்பாய்!

வாழ்வெல்லாம் தமிழுக்கே என்று சொல்லி
வாகைதனைச் சூடுகின்ற தமிழா! கேடுற்று
வாழுமிந்தச் சீர்கேட்டினை அகற்று தற்கே
திருநாட்டின் விழிதிறப்பாய்! விலங்கொ டிப்பாய்!

திட்டமும் திண்டாட்டமும்

(சி. பெரியண்ணன்)

சோஷியலிச சமுதாயத்தை அமைப்பதற்காக இரண்டு ஐந்தாண்டு திட்டங்களை முடித்து விட்டுமூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தையும் அ. இ. கா. க. சில நாட்களுக்கு முன்தான் பரிசிலனை செய்துள்ளது. பல தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளது. திட்டம் தீட்டிவிடுகிறார்களே தவிர, திட்டத்திற்குக் கோடி கோடியாகக் கொட்டி அழுகிறார்களே தவிர, அத்திட்டங்களினால் சர்க்காரும் மக்களும் அடைந்துவரும் பயன் என்ன? திட்டம் வகுப்பதோ பிரமாதம்! திட்டத்திற்குச் செலவழிக்கும் பணமோ ஏராளம்!

தாமோதர் பள்ளத்தர்க்குக் கார்ப்பரேஷனின் கணக்குகளில் பல ஓட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஓட்டைகளைக் கண்டுபிடித்துள்ள தணிக்கையாளர்கள், சில வீண் செலவுகளையும், நஷ்டத்தையும் கண்டித்துக் குறிப்பு எழுதியுள்ளனர். கார்ப்பரேஷனின் 1957—1958 ஆண்டு தணிக்கை அறிக்கையில் இந்த ஓட்டைகளைப்பற்றிய சில தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சிந்திரி உரத் தொழிற்சாலைக்குக் கார்ப்பரேஷன் கொடுக்கவேண்டிய ரூ. 9-இலட்சத்திற்கு மேற்பட்ட ஒரு தொகையும், கண்டிராக்டர்களின் டிபாசிட் தொகை சுமார் ரூ. 54-இலட்சமும் ஐந்தொகைக் கணக்கில் எழுதாமல் விடப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். மரங்களைப் பிடுங்குவதற்காகக் கண்ட்ராக்ட் விடப்பட்டு அதற்கான பணமும்கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் அங்கு இருந்த மரங்கள் சொற்பந்தான். ஆனால் கண்ட்ராக்டர்கள் பிடுங்கிய மொத்த மரங்கள் 11,000 என்று கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. '11,000-மரங்கள் இருந்தனவா' என்று கார்ப்பரேஷன் விசாரித்து வருகிறது. ரூ. 12,000 மதிப்புள்ள ஒரு ஜீப் களவுபோனது சம்பந்தமாக இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து பணம் பெறுவதற்காகச் சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்காக ரூ. 14 000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. மதிப்பு ரூ. 12,000; ஆனால் பணம் பெறுவதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்டிருக்கும் செலவோ 14,000 ரூபாய். இவ்வளவு செலவு செய்தும் வாங்கினார்களோ இல்லையோ? யார் அறிவார்?

மற்றும், பாதுகாப்பு இலாகாவில் நடந்திருக்கும் ஒழுங்கீனங்களைத் தணிக்கை அதிகாரிகள் எடுத்துக்காட்டி ஒரு அறிக்கை தயாரித்திருக்கின்றனர். பெருவாரியான சாமான்களுக்கு உத்தரவு கொடுக்கும்போது டெண்டர் வரவழைக்கும் முறையைத்தான் கையாளவேண்டுமென்பது சாதாரண நியதி. ஆனால் பாதுகாப்பு இலாகா அதிகாரிகள் அத்தகைய முறையைக் கையாளாமல் ஒரு அந்நிய கம்பெனியுடன் நேரடியாகப் பேரம் நடத்தி அதிகமான பணத்திற்கு மோட்டார் பகுதிகளை வாங்கியிருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட பயன் தேவைக்கதிகமாக 23 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மோட்டார்பகுதிகள் அந்த இலாகாவிடம் குவிந்துகிடக்கின்றன. உபயோகமற்ற பெருவாரியானவற்றை அக்கம்பெனியேஎடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உடன்படிக்கை இருந்தும், அக்கம்பெனி அப்படிச் செய்யவில்லை. அவ்வாறு எடுத்துக்கொள்ளப் பாதுகாப்புஇலாகா நிர்ப்பந்திக்கவோ எவ்வித நடவடிக்கையோ எடுத்துக்கொள்ளவில்லை. எவ்வளவு சாமான்கள் கைவசமிருக்கின்றன? அல்லது எவ்வளவு சாமான்கள் தேவை? என்ற புள்ளி விவரத்தில் கவனம் செலுத்தாத காரணத்தால் மூன்று இனங்களில் மட்டும் 24 இலட்ச ரூபாய் பெறுமான சாமான்கள்பயனற்றுப் பாதுகாப்பு இலாகாவில் குவிந்துகிடக்கின்றன. அதேபோன்று முன்யோசனை இல்லாமையால் 7 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பட்டுத் துணி சென்ற ஏழு வருட காலமாக உபயோகப்படாமல் கிடப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர். இன்னொரு இனத்தில் 73 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மாயவலைகள் சென்ற பல வருஷங்களாக வெட்டவெளியில் கிடந்து வீணாகிவிட்டதையும், தணிக்கை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். 1954 முதல் 1958 வரையில் $3\frac{3}{4}$ இலட்ச ரூபாய் செலவில் வாங்கப்பட்ட பால் பதனிடும் இயந்திரங்கள் 10ம் உபயோகப்படுத்தாமல் கிடக்கின்றன, ரூபாய் 16 இலட்சத்திற்கு வாங்கப்பட்ட மற்றொரு சாதனம், அது எதற்காக வாங்கப்பட்டதோ அதற்குப்பயன்படுத்தப்படவில்லை. ஒரு திட்டத்திற்கு இடம் கிடைக்கிறதா? என்று தீரக் கவனியாததால்அதற்குச் செலவழிக்கப்பட்ட ரூபாய் 4 இலட்சமாகும். மத்திய இராணுவ தளவாடசாலையில் 7 இலட்ச ரூபாய் பெறுமான சாமான்கள் பூமிக்கடியில் மறைத்துவைக்கப்பட்டிருந்ததை வெளிபடுத்தப்பட்டுள்ளது. மற்றொரு கிடங்கில் 73 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மறைக்கும் வலைகள் சென்ற யுத்த காலம் முதல் திறந்தவெளியில் கிடந்ததால் உபயோகமற்றுப் போய்விட்டன.

வெளிநாட்டுத்தூதராலயங்களில் அவசியமற்ற துறைகளில் பணம் பாழாக்கப்படுகிறதென்ற புகார் இலண்டனிலிருந்துதான் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றது. ஆனால் அதைப்பற்றி இதுவரையில் அதிகமாக அலசப்படுவது கிடையாது. ஆயினும், இலண்டன் வெளிநாட்டு தூதராலயத்தின் செலவுகளை எந்தெந்த வழிகளில் சிக்கனப்படுத்தலாம்! என்பதை ஆராய நியமிக்கப்பட்ட குழு செய்துள்ள சிபார்சுகளை அவ்வளவு எளிதாக நாம் தள்ளிவிட முடியாதல்லவா? "குறிப்பிட்ட சில செலவினங்களைக் கட்டுப்படுத்தினால் ஆண்டொன்றுக்கு 25 இலட்ச ரூபாய் மிச்சப்படுத்தலாம்" என்று அந்தக் குழு தெரிவித்துள்ளது. ஒன்றல்ல இரண்டல்ல இருபத்தைந்து இலட்ச ரூபாய்! மாதம் ஒன்றுக்கு சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை மிச்சப்படுத்தலாம் என்று அக்குழு தெரிவித்துள்ளது.

இப்படி மக்களின் வரிப்பணம் பாழாக்கப்பட்டால் ஐந்தாண்டுத் திட்டங்களினால் சோஷியலிச சமுதாயத்தை அமைக்க முடியுமா?

பசி பசி என்று கதறும் தாய்க்குக் கஞ்சியில்லை. அவள் மடியில் தவழ்ந்தாடும் பச்சிளங் குழந்தைக்குப் பாலில்லை, படாதபாடுபட்டுப் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரி மக்களுக்கு வேலையில்லை. உழைத்துழைத்து உருக்குலையும் உழைப்பாளிக்கு, பாடுபடும் பாட்டாளிக்கு உழைப்பிற்கேற்ற ஊதியமின்றி மெலிந்த உடலோடு ஊசலாடிக் கொண்டிருக்கும் காட்சியைத்தான் நாம் காணமுடிகிறது.

பண்டிதரின் மழுப்பல்—படீலின் விளக்கம்!

ர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (18—10—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 14

"சர்க்கரை, பற்றுக்குறை பற்றுக்குறை, என்று அலறுகிறீர்களே! பொருளாதாரம் தெரியுமா உங்களுக்கு? விலை ஏறுகிறது நாளுக்கு நாள்! ஏறட்டும், ஏறட்டும் என்று ஆவலோடு, ஆர்வத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன், நான்! ஏதோ நடக்கக்கூடாதது நடப்பதைப்போல் பதறுகிறீர்களே, பொல்லாத வேளை வந்துவிட்டதைப் போல் துள்ளி எழுகிறீர்களே, ஏனிந்த ஆத்திரம்' அவசரம்!"—என்று பண்டிதர்—கூறவில்லை—கருதிக் கொண்டார்!

அங்ஙனம் கருதிக்கொண்டு, 'பொன்னான'தோர் 'விளக்க'த்தை உதிர்த்திருக்கிருர்—அந்த 'விளக்க'த்தினைக் கண்டாவது நாடு திருப்தியடையாதா என்ற நப்பாசையில்!

"நாட்டு மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது—அதனுல் சர்க்கரைக்கான தேவை பெருக, அதன் விலையும் உயர்ந்திருக்கிறது"—இது அவர் 'அருளி'யிருக்கிருர்—விளக்கம்!

இதோ மற்றோர் 'அருள் வாக்கு!'—பண்டிதர் தம் அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற படீல் தரும் காரணம்!

"பத்தாண்டுகட்கு முன்பு, 9-இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்திசெய்து கொண்டிருந்த நாம், இப்போது 20-டன் உற்பத்தி செய்கிறோம்! மக்கள் தொகைகூட அந்த அளவு வேகமாக வளர்ந்துவிடவில்லை! ஆனுலும் பற்றுக்குறை இருக்கிறது என்பதைக் காணும்போது, **எங்கோ ஓரிடத்தில் தவறு இருக்கிறது!** அதைக் கண்டுபிடித்தே தீருவேன்."

பரபரப்பு வேண்டாம் பொறுங்கள், என்று போதனை செய்கிருர் பண்டிதர் — இல்லையில்லை பரபரப்பு ஊட்டக்கூடிய நிலைமை இது, என்கிருர் படீல்!

இவற்றில் எதை நாம் நம்புவது? பண்டிதர் சொல்லுவது உண்மையா, இல்லை படீலின் கூற்றுத்தான் உண்மையா?

எங்கோ ஓரிடத்தில் தவறு!

என்ன பொருள் அதற்கு?

"பற்றுக்குறைக்கான பெரும் பொறுப்பு வியாபாரிகளைச் சார்ந்தது"—இது படீல் பேசிய பேச்சின் மற்றொரு பகுதி!

"வியாபாரிகளே, பதுக்கல்காரர்களே, ஜாக்கிரதை! என்றாவது ஒரு நாள் உங்களைக் கண்டுபிடித்துவிடுவேன்" என்று சொல்லாமல் சொல்லுகிருர் என்று தானே நினைக்கத் தோன்றுகிறது, அவரது பேச்சினைப் படிக்கின்ற நமக்கெல்லாம்!

ஆனுல் அவ்வளவு நேரிடையாகச்—சொல்ல அவருக்கே மனமிருந்தாலும்—சொல்ல அனுமதிக்குமா அவர் சார்ந்திருக்கிற கட்சி!

யார் யாராலே காங்கிரசு இன்னமும் மக்கள் முன்னாலே கட்சியாக நின்று வருகிறதோ, யார் யாருடைய பேழை தேவைப்பட்ட நேரத்திலெல்லாம் காங்கிரசுக்குக் 'காமதேனு'வாக மாறுகிறதோ, அவர்களையா காட்டிக் கொடுப்பார்கள்?

எனவே, படீலின் போர்க்கோலம், எந்த அளவோடு நிற்குமென்று, நாடு அறியும்—நாம் எடுத்து விளக்கத் தேவையில்லை.

இங்ஙனம் முதலமைச்சர் மழுப்பவும், அவர் தம் அமைச்சரவையிலேயிருக்கிற மற்றொருவர் மறைமுகமாகக் காரணத்தை எடுத்துக்காட்டவுமாக இருக்கின்ற இந்தத் தருணத்தில் மற்றொரு 'சுவையான' செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது!

அந்தச் 'சுவை' தந்திருப்பவர் நமது மாநில அமைச்சர் மாணிக்கவேலர்!

சமயம் பார்த்து அவர் 'பட்டாசு' ஒன்றைக் கொளுத்தி, தூக்கி எறிந்திருக்கிருர், வெடித்தால் வெடிக்கட்டும், புஸ்வாணமாகப் போனுல் போகட்டும் என்ற எண்ணத்தில்!

"சர்க்கரையையும் வனஸ்பதியையும் அதிகமாக உட்கொள்ளுவதுதான், பலர் மாரடைப்பினுல் உயிரிழப்பதற்குக் காரணம்,"

இது அந்தப் 'பெரியவ'ரின் திடீர்க் கண்டுபிடிப்பு!

தாயும் தந்தையும் தாம்பூலம் போட்டிருப்பதைப் பார்த்து, "அம்மா, எனக்கு;' என்று மழலைச்சொல்லாலே குழந்தை கேட்க, மறுக்கமுடியாத தாய், மறுத்தால் குழந்தை எங்கே அழத் தொடங்கிவிடுமோ, பின்னர் அழுகையை நிறுத்தப் படாதபாடு பட்டாக வேண்டுமே, என்ற பயத்தில், மெள்ளக், கன்னத்தை வருடி, "கண்ணு" என்று ஆரம்பித்து "நீயெல்லாம் போட்டால், உன்னை மாடு முட்டிவிடும்" என்று கூறிக் குழந்தையின் வாயை அடக்குவதைப்போல், அந்த அமைச்சர், சர்க்கரை உபயோகிக்காதீர்கள் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிருர்!

நிலைமை எப்படி இருந்தபோதிலும் நாட்டில் சர்க்கரைக்கு உண்டாகியிருக்கும் பஞ்சம் எப்படி ஏற்பட்டதென்பதற்கு விளக்கமும், அதனை விலக்க வழி காண்பதும் பாராள்வோரின் பொறுப்பு என்பதை நாம் கூறத்தேவையில்லை.

★

நீதியின் குரல்!

"அன்பு"

[மண்ணுக்கு மண் இயற்கையின் போக்கு வேறுபடலாம். மனிதப்பண்புகள் மாறுபடலாம்; ஆனல் நீதி எங்கும் என்றும் ஒன்றுதானே; ஒரே தன்மையதுதானே! இங்குஒலிக்கும் நீதியின் குரல் இந்தப் பூமியில் ஒலித்ததல்ல. ஆயினும் மனித இனம் முழுமைக்கும் ஒலிக்கப்பட்டது போன்றிருக்கும். இலண்டனில், வெள்ளையர் — கறுப்பர் என்ற இன பேதத்தைக் கலகத்தின் மூலம் கிளப்பிவிட்ட ஒன்பது ஆங்கில இளைஞர்களுக்கு நான் காண்டுகள் சிறைத்தண்டனை கொடுத்த நீதிபதி சால்மன் தனது தீர்ப்புரையில் கூறியவை கீழே நீங்கள் காண்பது. தூய்மை உள்ளங்களுக்கு சிந்தனைவிருந்து; மாசு உள்ளங்களுக்கு கறை போக்கும் மருந்து. நமது மண்ணுக்கு அப்படியே பொருந்தும்.]

"நீங்களெல்லாம், மனித வேட்டையாடிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுச் செய்த குற்றத்தையும் ஒப்புக்கொண்டு இங்கு நிற்கிறீர்கள், நிறபேதத்தை எந்த அளவுக்கு தூண்டிவிட முடியுமோ அந்த அளவுக்கு நீங்களெல்லாம் தூண்டிவிட்டிருக்கிறீர்கள். பிறப்பால் ஒன்றி நிறத்தால் மாறுபட்ட அந்த மனிதர்கள் உங்களுடைய மிருகத்தனமான செயல்களுக்கு ஆளாகியிருக்கிருர்கள்.

"கடந்த இரவு, அமைதியோடு சட்டத்தை ஒட்டி நேர்மையான வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த ஐந்து பேர்களைச்சிறிதுகூட நெஞ்சு ஈரமில்லாமல் தாக்கியிருக்கிறீர்கள். அவர்களும் உங்களைப்போல் இந்த நாட்டு குடிமகன்கள்தான்! அவர்கள், உங்களைப்போன்று பிறப்பால் வெள்ளையரல்லாதார், என்பதைத் தவிர உங்களுக்கு அவர்களைப் பற்றி என்னதெரியும்? அவர்கள் உங்களுக்குச் செய்த இன்னல்கள் தான் என்ன? ஆனல், இனத்தால் வேறுபட்டவர் என்பதுதான் நீங்கள் அந்த ஐவர் மீது கையாண்ட செயல்களுக்குக் காரணம்.

இத்தகைய கொடுஞ் செயல்களைச் செய்த நீங்கள் ஐவரும் யார் தெரியுமா? இந்தப் பகுதியின் மக்கட் தொகையின் ஒரு சிறு பகுதி ஆனல் நீங்கள் செய்துற்ற வன் செயல்களோ உங்கள் பகுதியினர் அத்தனை பேருக்குமே மாசு கற் பிப்பதாய் அமைந்துள்ளது. நீங் கள் வாழும் நாட்டுக்குப் பெரும் இழுக்கைத் தேடிக்கொடுத்துள் ளீர்கள்.

ஒவ்வொரு குடிமகனும், இன நிறபேத சிறிதுமில்லாமல் தலைநிமிர்ந்து அச்சமே மின்றி இந்த நாட்டில் அமைதியுடன் வாழ பூரண உரிமையுண்டு.

உங்கள் எண்ணம் எத்தனையள வேண்டுமாயினும் கீழானதாக இருக்கலா ஆனல் அதை உங்களுள்ளேயே வைத் எண்ணிப்பார்க்க மட்டுமே உங்களுக் உரிமையுண்டு. அந்தக் கீழான எண்ணத் உங்கள் செயல் முறைகளிலும் தோற்றுவி கத் துணிவீரானல் அந்தக் கணமே சட்ட தனது நீதி என்னும் கரங்கள் கொண் உங்களைத் தண்டிக்கத் தயாராக இருக்கு

நீங்களாயினும் சரி அல்லத உங்களைப்போன்று இன பேத செய்கைகளில் இறங்கும் எந் மனிதனுயிருந்தாலும் சரி; எல்லே ரும் நீங்கள் அடையப்போகும் மு வையே அடைவர்! இதுபோன் செயல்கள் எங்கு நடந்தபோதிலு நீதி அங்கெல்லாம் இந்தத்தண்ட யைத்தான் அளிக்கும்!

—"Readers Digest"
Aug. 1959

★

நாடு முன்னேற நல்ல வழிகள்

ஆடுதுறை
அ. ஹபீப்முஹம்மது

இன்றைய தினம் மக்களது வாழ்க்கை வசதிகளைப் பார்க்கும்போதும், அவர்களது சூழ்நிலை அமைந்திருக்கும் விதத்தைப் பார்க்கும்போதும் பொருளாதாரம் நாட்டிலே எவ்வளவு தூரம் சீர் குலைந்திருக்கிறது என்பது புலனாகும். வாழ்க்கைத்தரம் முன்பைவிட இப்பொழுது கடினமாகச் சென்று கொண்டே இருக்கிறது. இத்தகைய மாறுமாட்டுக்குரிய காரணத்தை ஆராயும்போது உண்மை ஓரளவு வெளிப்படுகிறது.

நாடு விடுதலை அடைந்து 12 ஆண்டுக் காலமாக மக்களது வாழ்க்கை மலர்ந்தபாடில்லை. அவர்கள் தங்களது வாழ்க்கையை எவ்விதத்திலும் உயர்த்த முடியவில்லை. வருடங்கள் செல்லச் செல்ல, நாட்டிலேயும் நல்லநிலைமை ஏற்படுவதற்குச்சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. இத்தகைய நிலைமை இன்றைய தினம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் சில. **1.** வேலையில்லாத் திண்டாட்டம், **2.** உற்பத்திக் குறைவு, **3.** பொருள்களின் அதிக விலை, **4.** மக்களின் உற்பத்திப் பெருக்கம், **5.** தேவையான தொழிற்சாலைகள் இல்லாமை, **6.** தேவைக்கேற்ற பொருட்கள் கிடைக்காமல் இருத்தல், **7.** அத்தியாவசியப் பொருள்களுக்கும் அயல் நாட்டை எதிர் பார்த்திருத்தல், **8.** திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுமல் இருத்தல், **9.** பல வழிகளில் பண விரயம், **10.** நாட்டிலே கிடைக்கும் கனிப்பொருள்களையும், இயற்கை வளத்தையும் பயன்படுத்துவதில் தாமதம். இத்தகைய குறைபாடுகள் காணப்படுவதால்தான் நாடு முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்ல முடியவில்லை. மேற்கூறிய குறைகள் எந்த நாட்டில் இல்லாதிருக்கிறதோ, அந்த நாடுதான் விரைவில் முன்னேறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பற்றியும், சோவியத் நாட்டைப்பற்றியும், ஆங்கில நாட்டைப்பற்றியும் படிக்கும்போதும், அங்குள்ள மக்களின் வாழ்க்கை வசதிகளைப்பற்றி அறியும்போதும், மேற்கூறியகுறைகள் இல்லாதிருப்பது ஒரு விந்தையேயாகும். இத்தகைய குறைபாடுகள் இல்லையென்பதற்கு அங்கு வாழும் மக்களின் பொருளாதார உயர்வே நமக்கு நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. ஒரு நாடு, எந்தெந்தக் காரணங்களால் சீர்குலையும், சமுதாயம் மாறுபடும் என்ற விபரத்தை உணர்ந்து அதற்கேற்ற வகையில் திட்டங்களையும், சட்டங்களையும் வகுத்து ஆட்சி நடத்துவதனுல்தான் மக்களது தேவைகளை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய முடிகிறது.

பொருளாதாரத் துறைகளில் பின்தங்கியிருந்த நாடுகளெல்லாம் சில ஆண்டுகளில் முன்னேறியிருப்பதற்குக் காரணம், குறைகளை நன்கு உணர்ந்து அவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் மக்கள் ஒன்று பட்டு உழைத்ததினுல்தான் முன்னேற்றத்தைக் காண முடிந்தது. உதாரணமாக, இரண்டாவது உலகப்பெரும்போரினுல் அழிந்துபோன ஜப்பானின் சில பகுதிகள் இன்று முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காண்கிறோம். இன்னும் இதைப்போன்ற குறைவான மக்கள் தொகை கொண்ட நாடுகள் எல்லாம் பொருளாதாரத் துறைகளில் சிறந்து விளங்குவதைப் பார்க்கிறோம். பொருளாதார உயர்வை எந்த நாடு பெற்றிருக்கிறதோ அவற்றிலிருந்து அந்நாட்டு மக்களின் உள்ளங்களில் எவ்வித உணர்ச்சியும், சேவை மனப்பான்மையும் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

ஒரு நாட்டில் உள்ள மக்கள் ஆனந்தமாகவும், இன்னொரு நாட்டில் உள்ள மக்கள் அத்தகைய ஆனந்தத்தை அனுபவிக்காமல் இருப்பதற்கும் காரணம் பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள்தான் என்பது நன்ருகத் தெரிய வரும். அத்தகைய குறைபாடுகள் எந்த நாட்டில் குறைவாக இருக்கின்றனவோ, அந்த நாட்டில் குழப்பங்களும், கூச்சல்களும்தான் அதிகமாக இருக்கும்.

இனிப், பொருளாதாரம் உயர்வதற்கான சில வழி வகைகளைக் காண்போம். முதலாவதாக வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டினின்றும் அறவே ஒழிக்கப்பட வேண்டும். ஒரு நாடு முன்னேறுவற்குத் தடையாக இருப்பதற்கு இந்தவேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தினுல்தான் மக்களது மனம் கசப்படைந்து மற்ற முன்னேற்றக்

காரியங்களில் ஈடுபடவும் மனம் வராமல் போய்விடுகிறது. படித்த பல பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லாது போகவே, அவர்கள் அறிவைக் கொண்டு செய்யப்படவேண்டிய தொழில்களும் தடைப்பட்டு செய்ய முடியாமற்போவது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தீங்கு ஏற்படுத்துகிறது. அவர்கள் ஒரு பொறியியல் வல்லுனராகவோ, விவசாயத்துறை வல்லுனராகவோ, பொருளாதார நிபுணராகவோ இருந்து, அவர்கள் அறிவும், உழைப்பும் நாட்டுக்குப் பயன்படாவிட்டால், அவர்களால் நாட்டுக்கு என்னபயன்? அந்தப் பட்டதாரிகளுக்கும்தான் என்ன பயன்? இத்தகைய அவல நிலைக்கு நாட்டிலே இடமே இருக்கக் கூடாது. ஒருநாடு என்றால் படித்தவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பளித்து நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு முற்பட வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் தொற்றுநோய் போன்றதாகும். இதை உடனடியாகச் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

இரண்டாவது, பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் பணியில் மக்கள் தீவிரமாகப் பாடுபட்டு உழைக்கவேண்டும். உணவு உற்பத்தியோடு வாணிபப் பொருள்களின் உற்பத்தியையும் அதிகமாக்கவேண்டும். பொருள்களின் உற்பத்தி குறைந்தால் நாணயச் செலாவணிக்கு அதிக மதிப்பு இராது. ஒரு பொருள் ஒரு ரூபாய்க்கு விற்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதே பொருள் உற்பத்திக் குறைவினால் அடுத்த ஆண்டு இரண்டு ரூபாய்க்கு விற்கிறதென்றால், நாட்டிலே நாணயப் புழக்கம்தான் அதிகமாக இருக்குமேயல்லாது, பொருள்களின் பெருக்கம் அதிகமாக இராது. ஒரு நாட்டின் பொருளாதாரம் சீர்குலையாமல் இருக்கவேண்டுமானால் 100 ரூபாய் பணம் இருந்தால் 100 ரூபாய்க்கு பொருள்களும், 100 ரூபாய்க்குச்சில்லறைகளும் சரிவிகிதத்தில் இருக்கவேண்டும். இதன் விகிதம் எப்பொழுது மாறுபடுகிறதோ, அப்பொழுதுதான் பொருளாதார மந்தம் ஏற்படும். உற்பத்தியின் அளவு பெருகப் பெருகத்தான் நாணயத்தின் மதிப்பும் பெருக வேண்டும். உற்பத்தி பெருகாமல் நாணயம்மட்டும்பெருகிக்கொண்டேயிருந்தால், பணத்திற்கு மதிப்புக் குறைந்துவிடும். பொருள்களுக்கு மதிப்பு அதிகமாகிவிடும். ஆகவே பொருளாதாரம் நிரந்தரமாக இருக்க உற்பத்திப் பொருள்களின் அளவும், நாணய வெளியீடும் சரிவிகிதத்திலேயே இருக்கவேண்டும். இதற்கான முயற்சிகளில், மக்களும், ஆட்சியிலிருப்போரும் பெரும் பங்குகொண்டு உழைத்து நாட்டை முன்னேற்றவேண்டும்.

மூன்றாவதாக, பொருள்களின் அதிகவிலை. இந்த நிலைமை நாட்டிலே எப்பொழுது ஏற்படும் என்றால், விளைச்சல் குறைவான கலாங்களிலும், பஞ்ச காலங்களிலும் தான். இத்தகைய நிலைமையும் நீடித்துக்கொண்டே போனால் நாட்டின் முன்னேற்றம் அதிகமாகப் பாதிக்கப்படும். சில பதுக்கல்காரார்கள் உணவுப்பொருள்கள் கிடைக்காத காலத்தில் பொருள்களை பதுக்கி வைத்து, பின்னால் அதிக விலைக்கு விற்கலாம் என்ற கெடு மதிகொண்டிருப்பதாலும், பொருள்களின் விலை அதிகமாகிறது. உற்பத்தியாகும் குறைவான பொருள்களும் இலாபம் கருதிப் பதுக்கப்பட்டால் மக்களதுதேவைகளை எப்படிப்பூர்த்திசெய்யமுடியும்? கிடைக்காத பொருள்களுக்குத் தானே அதிகவிலை கொடுத்து வாங்கும்படி நேரிடுகிறது. இதன் காரணமாகத் தேவையான அளவும் சுலபத்தில் கிடைப்பதில்லை. குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு இத்தகைய நிலை பெரிய வேதனையாக இருக்கும். உணவுப் பொருள்கள் பருவகாலங்களிலும், மற்றக் காலங்களிலும் மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வகை செய்ய வேண்டும். உணவுப்பொருள்களைப் பதுக்கிவைத்து நாட்டு மக்களை நலிவுறச் செய்து, அவர்கள் விடும் கண்ணீரிலே ஆனந்தம் கொள்ளும் பதுக்கல்காரர்களைக் கண்டுபிடித்துஅரசாங்கம்அவர்களுக்குத் தக்க தண்டனையை அளிக்கவேண்டும். இத்தகைய தண்டனைகள் அளிக்கப்பட்டால் எவரும் எக்காரணங்களைக்கொண்டும் பொருள்களைப் பதுக்கமாட்டார்கள். இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், பதுக்கல்காரர்கள் தாங்கள் எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளைத் தங்கள் வசம் இழுத்துக்கொள்ள முற்படுவார்கள். இலஞ்சமும் தாண்டவமாடும். அத்தகைய அதிகாரிகள் நாட்டு மக்களின் வாழ்வையும், முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு பதுக்கல்காரர்களின் எந்தச் செய்கைக்கும் உடன்பாடாக இருக்கக்கூடாது. நேர்மையைஇங்குதான் நிலைநிறுத்திக் காண்பிக்க வேண்டும். மக்களும் பதுக்கல் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும். அரசாங்கமும் மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க வழிகள் செய்யவேண்டும். பொருள்களின் உற்பத்தி பெருகினால் அதிக விலைக்கே இடமிராது. மக்கள் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் பணியில் முற்பட்டால் அதிகவிலை ஏறாமல் செய்துவிடலாம். எக்காரணங்களைக்கொண்டும் பொருள்கள் பதுக்கப்படக் கூடாது. அரசாங்கமும், மக்களும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

நான்காவதாக, மக்களது உற்பத்திப் பெருக்கம் குறையவேண்டும். இது ஒரு மிகச் சிக்கலான பிரச்னை. மக்கள் உற்பத்திக்கு ஏற்றவகையிலும், அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலும் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் அதிகமாக இருந்தால் மக்கள் தொகையைப்பற்றி மனம் சஞ்சலமடைய வேண்டாம். நாட்டிலே வறுமையும், பிணியும் தலைவிரித்தாடுவதற்கு மக்கள் உற்பத்தியும் ஒரு முக்கிய காரணமாகக்கூறலாம். நாட்டிலே 'குசேலர்' போன்றவர்களின் குடும்பங்கள் நிறைய இருக்கின்றன. இவர்களையெல்லாம் பராமரிப்பது என்பது சாதாரண காரியமா? தங்களுக்கு வருகின்ற குறைந்தவருமானத்தைக்கொண்டு ஓரிரண்டு குழந்தைகளைத்தான் நல்ல முறையிலே இங்கு உருவாக்க முடியும். அத்தகைய குழந்தைகளால் நாட்டுக்கும் பயன் ஏற்படும். இந்த உபகண்டம்போன்ற ஏழ்மையான நாடுகளுக்கு மக்கட் பெருக்கினால் தீமைகள்தான் ஏற்படும். சமாளிக்கும் திறன் பெற்றிருப்பதாக மக்கள் கூறினாலும், வாழ்வின் பெரும்பாகம் துன்பத்திலேதான் சென்றுகொண்டேயிருக்கும். இத்தகைய மக்களது துன்பநிலை விரும்பக்கூடியதல்ல. நாட்டில் தேவையான அளவு வாழ்க்கை வசதிகள் அமைந்திருந்தால் மக்கள் பெருக்கத்தை ஓரளவு வரவேற்கலாம். நாட்டின் வளமும் குறைந்து, வாழ்க்கை வசதியும்

குறைந்து காணப்படும்போது மக்கள் இத்தகைய முயற்சிகளில் அதிகம் ஈடுபடாமல் நாட்டின் முன்னேற்ற வகைகளில் ஈடுபட்டு உழைத்தால் நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை செய்தவர்களாவார்கள். பெருமைகளைத் தேடித் தந்தவர்களுமாவார்கள். மக்கள்உற்பத்தி விகிதமும், பொருள்களின் உற்பத்தி விகிதமும் சம அளவில் இருந்தால்தான் நாடு நலமடையும். இவற்றில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் சிக்கல்தான் ஏற்படும். நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்றவகையில் மக்கள் தொகை இருக்கவேண்டும். மக்கள் இதுவிஷயமாகச் சற்றுத் தியாகம் தான் செய்யவேண்டும். இந்தத் தியாகம் அவர்களுக்கு மட்டும் நன்மை அளிப்பதோடு நில்லாமல், நாட்டிற்கும் அல்லவா பெருத்த நன்மையை அளிக்கிறது.

ஐந்தாவதாக, நாட்டில் தேவையான தொழிற்சாலைகள் இருத்தல் வேண்டும். பெரும்பாலான மக்களது வாழ்க்கைவசதிகளைப் பூர்த்தி செய்யவும், தேவைகளை உடனடி நிறைவேற்றிக்கொள்ளவும் பெரிய தொழிற்சாலைகள் பரந்து இருக்க வேண்டும், சிறுசிறு தொழில்கள் மட்டும் இருந்தால் போதாது. பெரிய தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்தால்தான் நாட்டை முன்னேற்றப்பாதையில் விரைவில் அழைத்துச்செல்ல முடியும். நாட்டின் தேவைகளையும், பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிப்பது பெரிய தொழிற்சாலைகள்தான். நிறையத் தொழிற்சாலைகளை நிறுவினால்தான் பொருள்களைக் குறைந்த விலையில் மக்களுக்குக்கொடுக்கமுடியும். அன்னிய நாட்டுப் பொருள்களுடனும் போட்டியிட முடியும். மேலைநாட்டுச் சாமான்கள் பெரும்பாலும் பெரிய தொழிற்சாலைகள்மூலம் தயார்செய்யப்பட்டு வெளியிடுவதனால்தான் அந்த நாட்டின் பொருளாதாரம் உயர்கிறது. போதுமான தொழிற்சாலைகள் இல்லாததினால் அன்னிய நாட்டுச்சரக்குகளுடன் போட்டியிட முடிவதில்லை. சிறு தொழில்களை மட்டும் நம்பி நாடு சென்றுகொண்டேயிருந்தால் மக்களது பெரும்பாலான தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாது. எல்லா மக்களுக்கும் தேவையான பொருள்களை விரைவாகவும், குறைந்த விலையிலும் கொடுக்கவேண்டுமானால், பலவித கனரகத் தொழிற்சாலைகள் நாட்டின் நாலா பகுதிகளிலும் நிறைந்திருக்கவேண்டும். தொழிற்சாலைகளை நிறுவி நாட்டின் நலிவைப் போக்கும் நல்லதொரு பணியிலே நாடாள்வோரின் நாட்டம் செல்லவேண்டும்.

ஆறாவதாக, மக்களது தேவைக்கேற்ற பொருள்கள் கிடைக்கும்படி செய்யவேண்டும். இந்த நிலை நாட்டிலே சரிவர அமுல் நடத்தப்படாவிட்டால் வாழ்க்கையே பாதிக்கப்பட்டுவிடும். வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் உள்நாட்டிலேயே கிடைக்காமல் இருப்பதாலும், இத்தகைய பொருள்களை இதரநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாலும் அந்நியச்செலாவணி அதிகமாகிப் பொருளாதாரம் சீர்குலைகிறது. மக்களுக்கு மிகமிக இன்றியமையாத பொருகள் என்னென்ன என்பதை ஆராய்ந்து முடிந்த வரையில் அப்பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்திசெய்ய முயலவேண்டும், அதற்கான சூழ்நிலையையும் உண்டுபண்ண வேண்டும். தேவையான பொருள்களை உள்நாட்டிலே உற்பத்தி செய்யாவிட்டால் வெளிநாட்டுப் பொருள்கள் உள்நாட்டுச் சந்தையிலே புகுந்து வெளிநாட்டுப் பொருளாதாரத்தை உயரும்படியும், உள்நாட்டுப் பொருளாதாரத்தைத் தாழும்படியும் செய்துவிடும். ஆகவே இருக்கின்ற வசதிகளைப் பூர்ணமாகப் பயன்படுத்திக்கொண்டு உள்நாட்டிலேயே மக்களுக்கு அத்தியாவசியமானபொருள்களைப் பெருக்கவேண்டும்.

ஏழாவதாக, அத்தியாவசியப் பொருள்களுக்கு அந்நிய நாட்டை எதிர்பாராதிருக்கலாம். ஒவ்வொரு சமயமும் வேற்று நாட்டையே எதிர்நோக்கிக்கொண்டிருந்தால் உள்நாட்டின் நிலை என்னாவது? மக்களது வாழ்க்கைத்தரம் என்னாவது? முன் கூறியதுபோல் மக்களுக்குத் தேவையான பொருள்களை உள்நாட்டிலேயே தயார் செய்துகொண்டு, வெளிநாட்டுச் சரக்குகள் வராமல் உள்நாட்டில் சில முக்கிய காரியங்கள் நடைபெறாது என்று தெரிந்தபின்தான் அந்நியநாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்யவேண்டும். கடைசி வரைக்கும் பிறநாட்டவரின் உதவியை நாடக்கூடாது. கூடுமான வரையில் உள்நாட்டிலேயே தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மக்களிடையே உள்நாட்டுப் பொருள்கள்மீது மோகம் கொள்ளும்படி செய்யவேண்டுமானால், பொருள்களின் தரம் எந்த விதத்திலும் குறைகூறும் வகையில் அமைந்திருக்கக்கூடாது. பொருள்களின் தரம் உயர்வானதாகவே இருக்கவேண்டும். இத்தகைய வியாபார தந்திரங்களைக் கையாண்டால்தான் வெளிநாட்டுப் பொருள்களை ஓரளவு தடை செய்யலாம். அத்தியாவசியப் பொருள்களைத் தயார் செய்வதிலும், அப்படித் தயாரிக்கப்பட்ட பொருள்களின் தரம் உயர்வானதாக இருப்பதிலும் ஆட்சியாளர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

எட்டாவதாக, வகுக்கப்பட்ட திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்பட வேண்டும். எந்தெந்தப் பகுதிகளுக்கு எப்படியெப்படித் திட்டமிடுவது என்பதும் கடினம். அதை நன்முறையில் செயல் படுத்துவதும் அதனினும் கடினம். திட்டங்களினால் மக்களது வாழ்வு மலர்ந்த வண்ணமாகவே இருக்கவேண்டும். மக்களது உள்ளங்களிலே திட்டங்களைப்பற்றித் தவறான கருத்துக்கள் படிந்துவிட்டால், அதை மாற்றவே முடியாது. திட்டங்களைத்திறமையுடன் வகுக்கவேண்டும். திட்டங்களினால் நாடு பூராவும் நன்மை அடையக்கூடியதாயிருக்க வேண்டும். திட்டங்களைச் சரிவர நிறைவேற்றாமல் போனாலும், தேவையான பகுதிகளுக்குத் தேவையான திட்டங்களை ஏற்படுத்தாமல் போனாலும் நாட்டிலே சுமுகமான நிலை ஏற்படாது. ஆகவே திட்டங்களினால் மக்கள் பூரணமாகப் பயனடையவேண்டும். அத்தகைய முறையிலே திட்டங்களைத் தீட்ட வேண்டும். நாட்டின் ஒரு பகுதிக்கு அதிகமான திட்டங்களும், இன்னொரு பகுதிக்குக் குறைவான திட்டங்களும் வகுத்து அமுல் நடத்தினால் குழப்பமும், கொந்தளிப்பும் தானே ஏற்படும். திட்டங்களை வகுக்கும்போதும் பாரபட்சம் சிறிதும் இருக்கக்கூடாது. திட்டங்களின் நோக்கமே மக்கள் அனைவருக்கும் நன்மை பயப்பதுதானே. அப்படியிருக்கத் திட்டங்களைப்பற்றிய வேறுபட்ட எண்ணத்திற்கே இடம் அளிக்கக்கூடாது. பொதுவாக ஒவ்வொரு திட்டத்தினாலும் நாடும், மக்களும் படிப்படியாக முன்னேறும் வகை

யில் சிறப்பான முறையில் அமைந்திருக்கவேண்டும்.

ஒன்பதாவதாக, மக்களால் பல வழிகளிலும் செலுத்தப்பட்ட வரிப்பணம் விரயமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பண விரயமாகும்நிலை ஏற்பட்டால் நாடு எந்த விதத்திலும் முன்னேறவே முடியாது. கஷ்டமான காலங்களில் மக்கள் கண்ணீரையும், செந்நீரையும் சிந்திச் சம்பாதித்த பணத்தை வரியாகக் கொடுக்க, அது அவர்களுக்குப் பயன்படாமல் விரயமாகிக் கொண்டே போனால், மக்களது உணர்ச்சி எத்தகையதாய் இருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பணம் விரயமாவதற்குக் காரணம், சரியான ஆட்சி நடவாததையும், ஆட்சியில் உள்ளவர்களின் பொறுப்பற்ற தன்மையும்தான் காரணமாகக்கொண்டு மக்கள் தங்களது உணர்ச்சிகளை வேறுவழிகளில் திருப்ப நேரிடும். நல்லபல திட்டங்களைத்திறமையாக நிறைவேற்றாமல் போனாலும், நாட்டிலே சர்வசாதாரணமாக இலஞ்ச ஊழல்கள் நடைபெறுவதைத் தடுக்காமல் போவதாலும் இத்தகைய பணவிரயம் ஏற்படுகிறது. ஆட்சிப்பீடத்திலே அமர்ந்திருப்பவர்கள்பணவிஷயமாகக்கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். விரயமான ஒவ்வொரு ரூபாய்க்கும் மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். ஆக ஊழல்களுக்கும், அனாவசியச் செலவுகளுக்கும் சற்றும் இடந்தரக் கூடாது. ஏழ்மை நாட்டுக்கேற்றவகையில் பணம் செலவழிக்கப்படவேண்டும். ஒரு சிலரின் உல்லாச வாழ்வுக்காக கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டால் பலரின் வாழ்வு சிதைந்துதான் போகும், நாட்டின் நிலைக்கும், மக்களது தேவைக்கும் ஏற்றவகையில் பணம் செலவழிக்கப்படவேண்டும். வரிப்பணத்தைக் கஷ்டப்பட்டுச் செலுத்தும் மக்களுக்குப்பணவிரயமானசம்பவம் பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணி அவர்கள் மனம் போராட்டத்திலேதான் ஈடுபட்டுக் கொண்டிருக்கும். பணவிரயம் தடுக்கப்பட வேண்டுமென்றால், திறமையானவர்களைக்கொண்டு நிர்மாணத் திட்டங்களைச் செய்யும்படி செய்யவேண்டும். முன்கூட்டியே திட்டம் செய்யாமல் அவ்வப்போது பணத்தைச் செலவழிப்பதாலும் சிற்சில சமயங்களில் பணவிரயம் ஏற்படுவதும் உண்டு. பண விரயமாகிவிட்டது என்று மக்களிடையே எவ்வளவுதான் காரணங்களை எடுத்துக்கூறிய போதிலும் அவர்கள் மனம் ஒருபோதும் சமாதானம் அடையாது. நிர்வாகத்தில் சாதாரணமாகப் பண விரயம் ஏற்பட்டாலும் பெருத்த அளவில் ஏற்படாத வகையில்ஆட்சியிலிருப்போர் விழிப்புடன் இருக்கவேண்டும். பண விரயத்திற்கு மக்களும் ஒரு காரணம் என்று கூறலாம். எப்படியெனில் திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமை மக்களிடம்தானே உள்ளது. அவர்கள் திறமையற்றவர்களை அனுப்பி, அவர்களது திறமையின்மையினால் ஏற்படுகின்ற கஷ்டங்களைப்பார்த்து மனம் புண்படுவதில் அர்த்தமே இல்லை... முன்கூட்டியே திறமைசாலிகளை அனுப்பும் திறன் மக்களுக்கு ஏற்பட்டால்தான் பின்னால் வரக்கூடிய பெருங்கேடுகளைத் தவிர்க்கமுடியும். ஆக மக்களும் ஆட்சி சம்பந்தமாக விழிப்புடன் இருக்கவேண்டும். ஆட்சியாளர்கள் மக்களிடமிருந்து வசூலிக்கும் பணத்திற்கு வழி சொல்லும் வகையிலும் நடந்து கொள்ளவேண்டும்.

பத்தாவதாக, நாட்டிலே காணப்படும் கனிப்பொருள்களையும், இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதில் தாமதம் இருக்கக் கூடாது. தாமதம் ஏற்பட்டால் நாட்டின் முன்னேற்றமும் தடைபடும். தகுந்த நிபுணர்களைக் கொண்டு கனிப்பொருள்கள் கிடைக்கும் இடங்களை ஆராய்ந்து அதுசம்பந்தமான ஆராய்ச்சிக் கூடங்களையும், தொழிற்கூடங்களையும் விரைவில் அமைத்தல்வேண்டும். இத்தகைய வசதிகள் கிடைத்து நாடு பயன்பெறவேண்டும் என்றால், சிறந்த ஆராய்ச்சியினால்தான் முடியும். ஆராய்ச்சி செய்வதில் தாமதமோ, அலட்சியமோ ஏற்பட்டால் விரைவில் பலன்களை எதிர்பார்க்கமுடியாது. பரந்து விரிந்து கிடக்கும் இயற்கைச் செல்வங்களை சக்திக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். புதிது புதிதாக ஆராய்ச்சி செய்வதாலும், கனிப்பொருள்கள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடித்து உடனடியாக ஆராய்ச்சி செய்வதாலும் மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத்துறைகளில் முன்னேறியிருக்கின்றன. அந்த நாடுகளைப் பின்பற்றி மற்ற நாடுகளும் செய்தால் எதிர்காலம் நல்லவிதமாக அமைய வாய்ப்பேற்படும். சுலபமாகக் கண்முன்காணப்படும் வளங்களை உடனடியாகக் கவனித்துத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வளங்களைப் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவதில் மக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது. ஒரு நாட்டின் செழுமை அங்கு கிடைக்கும் கனிப்பொருள்களையும், இயற்கை வளங்களையும், அவைகளை விரைவில் பயன்படுத்தும் முறையிலும்தான் இருக்கிறது. நாடு முன்னேற வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மேற்கூறப்பட்ட பத்து வழிகளையும் எந்த நாடு நன்முறையில் பின்பற்றி நிறைவேற்றுகின்றதோ அந்தநாடு முன்னேற்றப்பாதையை நோக்கி அடி எடுத்து வைக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பொருளாதாரத் துறைகளிலும் சிறந்து விளங்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆட்சியாளர்களும் மக்களும் ஒன்றுபட்டுச் செயல் புரிவார்களேயானால் நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றியமைத்துவிடலாம். பஞ்சமும் பிணியும், பட்டினியும் நாட்டில் தலைதூக்காமல் அடித்து விரட்டியே விடலாம்.

தாந்தே (கி. பி. 1265--1321)

கோ. கோதண்டராமன்

இடைக்காலத்தில் சாதாரண மனிதராக இருந்து கற்றறிந்த மேதையாக வெளிவந்தவர்தான் **தாந்தே** என்ற அரசியல் தத்துவ ஞானி. அவருடைய பெயரும் புகழும் பெரும்பாலும் அவர் இயற்றிய இலக்கியப் பெட்டகங்களின் வாயிலாகவே அவருக்குக் கிட்டிற்று. அரசியல் வாழ்க்கை மூலம் அவர் பெற்ற அரிய அனுபவம், திருந்திய—நாகரிக அரசுபற்றிய அவருடைய ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும் உறுதுணையாக நின்றன என்பது வெளிப்படை.

பன்னிரண்டு — பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் இத்தாலி நாட்டின் அரசியலில், அரசனின் ஆதிக்கத்திற்கும் போப்பின் ஆதிக்கத்திற்கும் இடையில் நிகழ்ந்த போட்டி உச்ச நிலையை அடைந்தது. அக்காலத்திய ஜெர்மானியச் சக்கரவர்த்தி, இத்தாலிய நகரங்கள் அனைத்தின்மீதும தன் ஆதிக்க உரிமை கொண்டாடினார். அதன் விளைவாக இத்தாலியில் ஜெர்மானியச் சக்கரவர்த்தியை ஆதரித்தவர்களுக்கும், அதனை எதிர்த்தவர்களுக்குமிடையில் ஒரு கடுமையான சச்சரவு வளர்ந்தது. இத்துடன் குடும்பச் சச்சரவுகளும் பூசல்களும் இத்தாலியின் அன்றாட நிகழ்ச்சிகளாக விளங்கின. நாளடைவில் இச்சிறு பூசல்கள் ஒரு கடுமையான போருக்கே அடிகோலின.

இத்தகைய அரசியல் குழப்பங்கள் உச்சநிலையில் இருந்தபோதுதான், தாந்தே பிளாரன்சில் தோன்றினார். அவர் தனது ஆயுட்கால முழுவதும் பல்வகைப் பூசல்களிலும் சிக்கித் தவித்தார். அவருடைய குடும்பம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சி அல்லது "குல்ப்" என்ற பெயரைக்கொண்ட கட்சியை ஆதரித்தது. கி. பி. 1289-ம் ஆண்டில், ஏகாதிபத்திய ஆதரிப்புக் கட்சியான "கிபலின்" கட்சியைக் "குல்ப்" கட்சி வெற்றிகொண்டபோது தாந்தே பிளாரன்ஸ் கவுன்சில்களில் பன்முறை பணியாற்றியுள்ளார். இதற்குப் பின் தாந்தே மற்றொரு அரசியல் குழுவில் சேர்ந்தார். இக்குழு "குல்ப்" கட்சியில் இருந்து தோன்றியதொன்றுதான் என்றாலும் அது "கிபலின்" கட்சிக் கருத்துக்களையே ஆதரித்தது, இச்சிறு அரசியல் குழுவை, சக்தி வாய்ந்த "குல்ப்" கட்சி எளிதில் தோற்கடித்துவிட்ட காரணத்தால், தாந்தே பிளாரன்ஸ் நகரில் இருந்து நாடு கடத்தப்பட்டார். அவர் நாடு கடத்தப்பட்டு வேற்று நாடுகளில் வாழ்ந்தபோதுதான் "டிமானர்கி" என்ற தனது அரசியல் நூலை எழுதினார். அக்காலத்துச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த ஏழாம் ஹென்றி இத்தாலிய நகரங்களைத் தன் ஆளுகைக்குக் கொண்டுவரும் முயற்சியில் பெறுகின்ற வெற்றி, இத்தாலியின் அமைதிக்கு மிகவும் இன்றியமையாதது என்று தாந்தே நம்பினார். சுருங்கக்கூறின் தாந்தே "டிமானர்கியா" என்ற தனது நூலை எழுதக் காரணம் இத்தாலிய நாட்டில், குடும்பச் சச்சரவுகள், வகுப்புப் பூசல்கள் கட்சி பேதங்கள் — இவைகளின் விளைவாகக் கிளர்ந்தெழுந்த உள்நாட்டுக் குழப்பத்தை ஒடுக்கி, அமைதியும் பலமுமிருந்த ஒரு நல்லாட்சியை நிறுவத்தக்க சக்தியை அவர் விரும்பியதேயாகும். அமைதிக்காக அவர் விடுத்த வேண்டுகோள், விரிந்த—பலமான அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பட்டதாகும். மனிதனின் குறிப்பிடத்தக்க புலமை வளர்ச்சிக்கு ஓய்வு மிகவும் இன்றியமையாததென்றும், ஒரு விரிந்த சாம்ராஜ்யத்தை நிறுவுவதன் மூலமே நிரந்தரமான அமைதியை நிலைநாட்ட முடியும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

"பொது சாம்ராஜ்யம்" என்ற தொடரின்மூலம் மக்கள் சமுதாயம் முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கிழ்க்கண்ட ஒரு அரசனையே அவர் குறிப்பிட்டார். தாந்தே தனது அரசியல் தத்துவங்களைத் தனக்கு முன் பல அரசியலறிஞர்கள் அளித்துச் சென்ற கருத்துக்களை நன்கு ஆராய்ந்த பின்னரே உருவாக்கினார். இஃதன்றி அவருடைய அரிய அரசியல் ஆராய்ச்சி முடிபுகள், அறநெறிச் சாரங்கள், ரோம்நாட்டு வரலாறு, இயற்கை விதிகள் இவைகளின்மீது கட்டப்பட்டவை என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. அவருடைய விவாதங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவருடைய முதல் நூல் "பொது முடியரசு" மனிதனின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற தத்துவத்தை வலியுறுத்துகிறது. இத்தகைய வரம்பற்ற ஆதிக்கத்தின் நேரடி நடவடிக்கையே பொது முடியரசின் மூலம் அமைதியைக் காப்பதற்கும், தேசிய சுயாட்சிக்கும், தனிநபரின்

(12-ம் பக்கம் பார்க்க)

பாலையா--சோலையா?

சென்ற இதழ் தொடர்ச்சி...

இயற்கையின் வலிய தண்டனைக்கு ஆளானேன். எங்கள் இன்பத்தின் நிலைக்களனாகப் பிறந்தவள்தான் மலர்க்கொடி. அவர் என்னை வஞ்சித்து விட்டாலும், அவருடன் காதல் மாளிகையில் வாழ்ந்தேனே, அந்தச் சிறிது காலத்தை என்னால் எப்படி மறக்க இயலும்? அவர்மீது தீராத சினத்தின் நெருப்பைக் கொட்டுகின்றேனா, அல்லது சிந்தையில் அவரை வைத்துத் தொழுகின்றேனா என்பது எனக்கே தெரியவில்லை. வெறுப்படைகின்றேனா? விருப்புடன் உள்ளேனா? அன்பு காட்டுகின்றேனா? ஆறாத புண் உண்டாக்கிவிட்டாரே என்று மாறாத பழியையும் பொல்லாப்பையும் சுமத்துகின்றேனா என்பது தெரியாமல் திகைக்கின்றேன். என்னை நானே எண்ணிப் பார்க்கும்போது சிரிப்பதா, அழுவதா என்பது தெரியவில்லை. அமைதியுடன் ஆழ்ந்து உள்ளத்தில் நானாவித நோக்குகளுடன் நினைவுக்கண் அவரைக் கொண்டுவந்து. சிந்தனை செய்கின்றபோது, அவர்மீது கரையில்லாக் காதலும், அன்பும், அநுதாபமும் ஏற்படத்தான் செய்கின்றது. கன்னல் மொழிபேசி, கடல்போலிருக்கும் அவ்வின்பக் களஞ்சியத்தின்ஓவியம்; அவருடன் நாம் வாழமுடியவில்லையே என்று எண்ணும்போது உணர்ச்சி வசப்படுகின்றேன். வெறுப்பும் சினமும் ஏற்படுகின்றன. பழியையும் பொல்லாப்பையும் அவர்மீது சுமத்தவே முற்படுகின்றேன். எப்படியோ இன்று நான் என்னிரு கண்மணிகள் எழில்வாணி, மலர்க்கொடியுடன் மட்டும்தான் உள்ளேன். அவரோடு நான் வாழவில்லை. இதை எண்ணிப் பார்க்கும்போதுதான் கண்ணீருடன் நீண்ட பெருமூச்சு விடவேண்டியுள்ளது.

அன்று அவர் கூறிய சொற்றொடர்கள் என்னை ஆத்திரமடையச் செய்துவிட்டன. "தயவு செய்து என்னை மன்னித்துக்கொள். என் வாழ்வில் நான் எப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ளேன் என்பதை உணர்ந்து, மன்னித்துவிடு. இப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்று நான் எண்ணிப் பார்த்ததே கிடையாது. தவறுதான். தயைபுரிந்து மன்னித்துக்கொள். உரிமை அனைத்தையும் கொடுத்து வளர்த்த என் பெற்றோர் இதற்கும் இணங்கியே விடுவர்; என் விருப்பத்திற்கு மாறாக நடக்கமாட்டார்கள் என்றுதான் எண்ணினேன்.

மதியொளி

ஆனால் இன்று அவர்கள் பெருந்தடையாக நிற்கின்றனர். அந்தத் தடையை என்னால் மீறமுடியவில்லை. புத்தமுது என்றுதான் நினைத்தேன். ஆனால் புழுதியின் முடை நாற்றம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணவில்லை'' என்றெல்லாம் பேசி, மலர்க்கொடியை வயிற்றிலே சுமந்துகொண்டு நின்ற என்னை நிராகரித்து, என்னைத் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று மறுக்காமல் மறுத்துக் கொண்டிருந்த அவரைச் சினக்காமல், எப்படி என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? என்னை, இனியவாழ்வுக் கனவுகளில் மூழ்கச் செய்துவிட்டு, இப்படி அலங்கோலப்படுத்திவிட்ட அவரை எப்படி மன்னிக்க முடியும்? என்னால் என்னை நானே அடக்கிக் கொள்ள முடியவில்லை. சினம் பெருகித், துரோகியே, தூர்த்தனே என்றெல்லாம் உரக்கக் கத்தினேன். அந்த நிலையில் என்னை நான் இழந்தேன். இன்னது செய்கின்றோம் என்பது எனக்கே விளங்கவில்லை. என் வலிவு கொண்டமட்டும், பலத்தை ஒன்று திரட்டி, அவர் கன்னத்தில் அடித்துவிட்டேன். சற்றும் எதிர்பார்க்காத அவர், திகைப்படைந்துவிட்டார் என்றாலும், தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்துவிட்டார். 'தூ' வெனக் காரியுமிழ்ந்துவிட்டு, என் அறைக்கு வந்துவிட்டேன். அன்று பார்த்ததுதான் அவரை. மறுநாள் காலை அவரைக் காணவில்லை எனத் தேடிக்கொண்டிருந்தார்கள். எனக்கென்ன—அவர் எங்கு சென்றால் என்ன — என்னவானால் என்ன என்றிருந்துவிட்டேன்; என்றாலும், என் இதயத்தின் ஒரு மூலையில் அழுகையின் ஓலக்குரல் கேட்கத்தான் செய்தது.

சமுதாயத்தின் செல்லரிக்கின்ற பிடிகளுக்கிடையில் சில காலம் சிந்தனை அமைதியின்றி, துன்பப் போர்வைக்குள் படுத்துக்கொண்டிருந்தேன். தேற்றுவாரின்றித் தேம்பிக் கிடந்த எனக்கு நானே ஆறுதல் கூறிக்கொண்டு, கசந்துவிட்ட என் வாழ்வை எண்ணிக் கனவுகளை ஒழிக்கலானேன். மலர்க்கொடி பிறந்தாள். ஐந்து வயதான அழகின் எழிற் சித்திரமான எழில்வாணி "பாப்பா,'' பாப்பா,'' "அம்மா; அம்மா'' என்று அவளின் கொஞ்சும் சிலம்பு ஒலியுடன், மழலையையும் வாரியிறைத்தாள். இருபெண்களும் எனது இரு கண்களாயினர்.

இருவரையும் இனிதே ஒரு குறைவுமின்றிப் படிக்கவைக்கலானேன். நாள்தோறும் தாங்கள் கற்றுக்கொண்ட கல்வியைக் கண்களும் இதழ்களும் மின்ன மின்னப் போட்டிபோட்டுக்கொண்டு என்னிடம் கூறி மகிழ்வித்தனர். இருவரையும் வாரியணைத்து வயிரமணிகளோ என முத்தம் தந்திடும்போது, இவ்வுலகத்தையே மறப்பேன். கண்ணீர் நிறைந்த என்

வாழ்வைக் கன்னல்மொழிகளால் நன்மணமாக்கினர்—இருவரும்.

கல்லூரியில் சேர்ந்து இருவரும் பி. ஏ. தேறிவிட்டனர். கன்னியர்களாக, கெண்டை விழிகளோடு எழில் பூரிப்போடு ஒளிவீசி நின்ற எழில்வாணியையும் மலர்க்கொடியையும் பார்த்திடும்போது, பூரித்துப் பெருமைப்பட முடியவில்லை. வேதனை என் இதயத்தைப் பிழிந்தெடுத்தது.

முல்லை நறுமணத்தோடும் நலத்தோடும் பூத்துக்குலுங்கி மலர்ந்திருந்தாலும், கார்குழலில் கன்னி யொருத்தி எடுத்துச் சூட்டிக்கொண்ட பின்னர்தானே, அந்த முல்லையின் சிறப்பு மிகுகின்றது, அல்லவா? என் அன்பின் இதயக் கண்மணிகளாக எழில் பூக்கும் பொழிற்சோலையாக விளங்கினாலும் எழில்வாணியும், மலர்க்கொடியும் நல்ல பண்புகொண்ட ஆண்மைத் துணையோடு சேர்ந்தால்தானே என் மனமும் அமைதியடையும்? இதை எண்ணித்தான் வேதனையடைந்தேன். பழியும் பொல்லாப்பும் ஏற்றுக்கொண்டு வாழும் என் கண்மணிகளுக்கு எப்படி இந்த இழிந்த குணங்களின் சட்டப்பிடிப்பில் வாழும் சமுதாயத்தில் எளிதில் திருமணம் நிறைவேறும் என்பதை எண்ணும்போது, இதயம் நோகத்தான் செய்தது.

ஆனால், என் எண்ணம் எளிதில் நிறைவேறிவிட்ட நிலையை நினைக்கின்றபோது,இன்பமுறுகின்றேன். இடையில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்ச்சி, தீய்ந்துகொண்டிருந்த என் வாழ்வில் தேமலர் சொரிந்தது என்றால், மிகையில்லை. வேட்கையாலெழும்பிய வேதனையால் துடித்துக்கொண்டு நடந்து சென்ற எனக்கு, இடையில், எண்ணிப்பாராத வேளையில், வேட்கை தீரும் இளநீர் கிடைத்ததை இன்பமுடன் ஏற்காமலிருக்க முடியுமோ? பயனற்றது எனக் குப்பையில் எறிந்துவிட்ட கல், பின் எதிர்பாராத வகையில் ஒளிவீசிடும் வைரக்கல்லாகக் கண்ணில்பட்டால் ...... அது, பாலையாகிவிட்டது என்றெண்ணியிருந்த என் வாழ்வைத், தென்றல் வீசிடும் சோலையாக்கிவிட்டது என்று கூறத்தான் தோன்றுகின்றது.

இளமை வாழ்வில் இனிய கணவன் அருகிலிருக்க வெண்ணிலவில் அமர்ந்திருப்பது இனிக்கத்தான் செய்கின்றது. முதுமையாகிவிட்ட வேளையில், காலக் கண்ணாடி திரையையும், நரையையும், மூப்பையும் உடலிலே பதித்துவிட்டவேளையிலும், தன் கூனிக் குறுகிவிட்ட கணவன் அருகில் அமர்ந்து, வாழ்க்கையேட்டில் எழுதிவிட்ட நிகழ்ச்சிகளை நினைவுக்குக்கொண்டு வந்து பெருமையும் பூரிப்பும், நாணமும் அடைந்து வெண்ணிலவினை உற்றுப்பார்க்கும் கிழவிக்கும் அவ்வெண்ணிலவு இனிக்காமல் இருந்திடுமா? இனிக்கத்தான் செய்யும். இளமையில் ஓவிய வண்ணத்துடன் இழைத்துத் தனக்கு எழுதப்பட்ட காதல் கடிதம், ஆண்டுகள் ஐம்பது ஆனாலும், ஓவியம் கலைந்து, மடிப்புகள் விழுந்து, எழுத்துக்களின் அமைப்பும் உருவிழுந்துகாணப்பட்டாலும்,அதைப் படிக்கின்ற அந்த நரை மூதாட்டிக்கு அக்காதல் கடிதம் மணத்துடன் இனிக்காமலிருக்குமா? அதுபோல்தான் என் வாழ்விலும் இனிக்கக் கூடிய நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டது. எழில்வாணியின் வாழ்வில் புது மணம் சேர்ந்ததுபோல, என் வாழ்விலும் மணம் நிறைந்தது.

தேவையான பணவசதிகளும்; இன்ப வாய்ப்புகளும் இருந்தும், வேலையொன்றிலீடுபடவேண்டும் என்ற எழில்வாணியின் எண்ணத்தை என்னால் நிராகரிக்கமுடியவில்லை. எனவேதான் ஒருகம்பெனியில் அவள் 150 ரூபாய் மாதச் சம்பளத்தில் வேலைக்கமர்ந்தாள். விபரீதம் ஏதும் நேர்ந்துவிடா வகையில் பழகும் தன்மையும், உண்மை நாகரிக நடத்தையும், உள்ளத்து உறுதியும், குடும்பத்துப் பற்றும், மான உணர்ச்சியும் ஒருங்கேகொண்ட அவளைப்பற்றி எனக்கு அச்சம் இல்லை. அவளை அவள் வழியில்விட எவ்வித பயமும் இல்லை. கம்பெனியிலும் தன் அடக்கத்தினாலும், பணிந்து போகும் போக்கினாலும், விட்டுக்கொடுக்கும்தன்மையாலும், கூர்மையான அறிவினாலும், குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட காலத்தில் செய்யும் ஒழுங்கினாலும், கம்பெனியின் வளர்ச்சிக்கு உழைக்கின்ற குணத்தினாலும், முதலாளியின தனிப்பட்டஅன்புக்கு உரியவளாகிவிட்டாள்—என் எழில்வாணி. முதலாளி எழில்வாணியின்மீது நம்பிக்கையோடு கம்பெனியின் தனிப்பட்ட முக்கியமான கணக்குகளைக் கூட ஒப்படைப்பாராம்.

ஒருநாள் முதலாளி வேறூருக்குச் சென்றுவிட்ட காரணத்தால், முதலாளியின் மகன் கம்பெனிக்கு வந்தாராம். ஆடம்பரமும் மிடுக்கான போக்கும் கொண்ட அவர் கண்களுக்கு அழகும் இளமையும் கொண்டு மணம்வீசி நின்ற என் எழில்வாணியைக் கண்டதும், காதல் பிறந்துவிட்டது போலும்! அன்றெல்லாம் அவசியமில்லாமல் வேறேதோ வேலையைச் செய்துகொண்டு முதலாளியின் அறையிலேயே நாணம் கவ்வ இருக்க நேரிட்டுவிட்டதாம். மறுநாள் முதலாளி வந்துவிட்டார். முதல்நாள் அவரின் மகன் எழில்வாணியிடம் நடந்துகொண்ட முறையையும், பேசின பேச்சுக்களையும் அவரிடம் கூறமுடியுமா? வாழ்வில் இது போன்ற நிலைகள் ஏற்படுவதை எதிர்பார்க்கத்தான் வேண்டும் போலும் என்று. எழில்வாணி இதை என்னிடத்தில் மட்டும் கூறிவிட்டு வேலைக்கு முன்போலவே சென்று வந்தாள்.

ஆனால், அதன்பிறகு சிலமுறை எழில்வாணியிடம்பேசமுயற்சித்துத் தோல்விகண்டு திரும்பிச் சென்றுவிட்டாராம் முதலாளியின் மகன். இறுதியில் ஒருநாள் எழில்வாணிக்குக் காதல் கடிதம் ஒன்று அவரிடமிருந்து வந்துள்ளது. பொறுக்கமுடியாத துக்கத்தால், அக்கடிதத்தை முதலாளியிடமே காண்பித்து அழுதிருக்கின்றாள். முதலாளி தனது சொந்த மகளைப் போல எழில்வாணியை நினைத்து வந்ததால், விசாரிப்பதாகச் சமாதானப்படுத்தியிருக்கின்றார்.

என்றாலும், எழில்வாணிக்கு மனம் நிம்மதியடையவில்லை. வேலைக்குச்சீட்டுக்கொடுத்துவிட்டு, வீடு வந்து என்னிடமும் விபரங்களைக் கூறினாள். நானும் அதனாலென்ன-வீட்டிலேயே இரு என்று கூறிவிட்டேன். ஆனால் வேலையை விட்டு நின்ற நான்காம்நாள் எழில்வாணியின் முதலாளி என் வீட்டிற்கே வந்துவிட்டார்.

‘ எழில்வாணி இல்லையா அம்மா’’ என்று கேட்டுக்கொண்டே வீட்டினுள் நுழைந்தார் — முதலாளி. யார் வந்திருப்பது என்று பார்க்க வந்தேன், ஆம்—அவரேதான் — என்னை ‘ கற்கண்டே! கனிச்சாறே! கலங்கவேண்டாம். காலத்தின் வெள்ளத்திலே எதிர் நீச்சல்போடுவோம். பாலையாகிவிடவில்லை உன்

வாழ்வு; சோலையாக்கவே நான் உள்ளேன்'' என்றெல்லாம் மயக்கமொழி பேசிப் பேசி, காதல் பூக்கச்செய்து, கடிமணம் புரிந்துகொள்வேன் என்று உறுதிமொழிதந்து, என்னை நுகர்ந்து, மலர்க்கொடியை ஈந்துவிட்டு, 'மன்னித்து விடு' என்ற ஒரே சொல்லால் என்னை மறந்துவிட்டுச் சென்றுவிட்டாரே, அவர்தான் எழில்வாணி எங்கே என்று கேட்டுக்கொண்டே வந்தவர் என்பதைத் தெரிந்துகொண்டேன். இதயம், பிடிபட்ட பறவையின் இறகுகளைப்போலத் துடிக்க ஆரம்பித்தது. அடுத்த கணம் என்ன ஆனது என்பது எனக்கே தெரியாது. ஆனல் நான் அவரது அரவணைப்பில் இருந்தேன். என் தலைமயிரைக் கோதிக்கொண்டு, கண்களில் நீர் வடிய என்னை நோக்கினர். செய்துவிட்ட தவறுக்கும் துரோகத்துக்கும் கழுவாய் தேடுவார் போன்று இருந்தது அந்தப் பார்வை எனக்கு. என் உள்ளத்திலிருந்து வார்த்தைகள் வெளிவரத் துடித்துக் கொண்டிருந்தன. எனக்கு இந்த இதம்தரும் இன்ப நிலை—அமைதிநிலை வேண்டியிருந்தது.

"கண்ணே! அன்று என்னை மறந்துவிடு என்று, செய்துவிட்ட துரோகத்துக்கு, திரைச்சீலை போட்டு மூட 'மன்னித்துவிடு' என்றேன். பாலையாக்கி விட்டேன் உன்னை. அன்றிலிருந்து என் மனச்சான்ருல் எரிந்துகொண்டிருந்த நான், இன்று, சோலையாக்கிட 'மன்னித்து மறந்துவிட்டு என்னுடன் வந்துவிடு' என்று வேண்டிக் கொள்ளுகின்றேன்'' என்று புலம்பினர்.

வியப்போடு என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த எழில்வாணிக்கும், மலர்க்கொடிக்கும் அவரை, 'அப்பா இவர்தான்' என்று அறிமுகப்படுத்திவைத்தேன், என்ருலும்கூட, அவர்களது வியப்புத்தீராமலிருந்தது. அவரின் பிடிவாதத்துக்கு—அவரின் எண்ணப்படி என்னல் நடந்துகொள்ள முடியவில்லை. அவருடைய வீட்டுக்கு நான் வரமுடியாது என மறுத்துவிட்டேன். அவர் இன்று அடைந்திருக்கும் மதிப்புடைய வாழ்வு, என்னுடைய வரவால் குறைந்துவிடும் என்பதை அவருக்கு நயமாகவே கூறி மறுத்துவிட்டதை அவரும் ஏற்றுக்கொண்டார். கண்ணீர் விட்டுக்கொண்டே "இன்று முதல் பாலையில்லை, சோலையே—என் கண்மணி நீயே'' என்று என்னைத் தழுவிக்கொண்டார். இதே அன்பு நீடித்திருந்தால் மட்டும் போதும் என்றுகூறினேன் விம்மலோடு.

மாசடைந்திருந்த ஓவியம் மீண்டும் பொலிவுடன் காணப்பட வழி உண்டான பின், எழில்வாணிக்கும், மலர்க்கொடிக்கும் நான் மட்டும் கவலைப்பட்டு வந்தது, அவருடன் சேர்ந்து கவலைப்படவேண்டியதாகிவிட்டது. எழில்வாணிக்கும், மலர்க்கொடிக்கும் என் துன்பமும் இன்பமும் வளமும் வறட்சியுமிணைந்த வாழ்வின் கதையை விளக்கிக்கூறினேன்.

"அம்மா! ஆருத் துயர் நிறைந்த வாழ்வினை மேற்கொண்ட உங்கள் தியாகம் உன்னதமானது — உயர்வானது'' என்று கண்ணீர்விட்டுக்கொண்டே என்னை இறுகத் தழுவிக்கொண்டனர். என் இரு கண்மணிகளைப்பற்றிய பொறுப்பு அவரைச் சேர்ந்துவிட்டது என்பதை உணர்ந்துகொண்ட அவர், தன் மைத்துனர் இருவர்களுக்கும் எழில்வாணியையும், மலர்க்கொடியையும் திருமணம் செய்துவைத்தார். என் தங்கைமுறை — அவருடையமனைவியும் தன் மாண்புள்ள குணத்தினல் மறுக்கவில்லை. 'அக்கா' என முறைகொண்டாடி, அன்போடு என்னிடம் பழகினள்.

வேடிக்கையாக இப்போதெல்லாம் நான் நினைப்பதுண்டு—என் வாழ்வு பாலையா, சோலையா என்று. இந்த வினு என் இதயத்தில், என் வாழ்வின் ஆதி அந்த நிகழ்ச்சிகளைத் திரையிட்டுக் காண்பித்துக் கொண்டே இருக்கிறது.

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரத்திற்கும் அடிகோலுகிறது என்று தாந்தே கருதினர். தாந்தே, தனது இரண்டாவது நூலில், வரலாற்றின் வடிவில் அக்காலத்தில் பிரசித்தி வாய்ந்த பொது அரசு ரோம் சாம்ராஜ்யம் தானென்று எடுத்துரைத்தார். மூன்ருவதாக, ஏகாதிபத்தியம் இயற்கையாகவே அரசனுக்கு வருகிறது, அது எந்தமதத் தலைவர் மூலமாகவும் வருவதில்லை என்று தாந்தே கருதினர். இன்னும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானல் அரசனின் ஏகாதிபத்திய உரிமை போப்பின் அதிகாரத்திற்கு வேறுபட்டதொன்ருகும். தாந்தேயின் இதே தத்துவந்தான், ஸ்டுவர்ட் மன்னர்கள் காலத்தில் "தெய்வ உரிமைத் தத்துவம்'' என்ற வடிவில் இயங்கியதுபோலும்!

புனித ரோம் சாம்ராஜ்யம், தாந்தேயின் காலத்துக்கு முன்பே, தன்னுடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் ஐரோப்பாவில் இழந்துவிட்டது. இதனல் தாந்தேயின் "டி மானர்கியா'' என்றநூலைத் தீர்க்க தரிசன நூல் என்பதைக் காட்டிலும் "ஞாபகார்த்த நூல்'' எனக் குறிப்பிடுவதே சாலப் பொருந்தும். எனினும் இடைக்கால அரசியல் எழுத்தாளர்களில் "நிலையற்ற அதிகாரத்தைக் கொண்டிருத்தல், திருச்சபையின் இயற்கைக்கு முரணனது'' என்ற தத்துவத்தை நிலைநாட்டிய முதல்வர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தாந்தே என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்தோர் உண்மை.

★

மனிதனிடம் ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றலைப் பயன்படுத்தவும், அவன் இந்த உலகில் நீண்டநாள் வாழவும், இயற்கை உலகத்துக்குத் தந்திருக்கும் ஏராளமான செல்வத்தைப் பாதுகாக்கவும் மனிதன் வேலை செய்ய வேண்டும். எனவே, தன்னிடம் ஆற்றல் இருக்கும்வரைக்கும், தான் வாழும்வரைக்கும், தனக்கு வசதி கிடைக்கும் வரைக்கும் மனிதன் வேலைசெய்தே ஆகவேண்டும்.

கலிமொழி

தி. சா. இராசு

மூங்கில்படலைத் தள்ளித் தோட்டத்தினுள் நுழைந்தார் தாமரை அம்மாள். தோட்டத்தைக் கடந்து வாயிற்கதவை அணுகியதும் அதன் நாதாங்கியில் இருந்த பூட்டின் துவாரத்தில் ஒருகாகிதச்சுருள் செருகியிருந்ததைக் கண்டார். அதை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்து வீட்டினுள் நுழைந்தார். அவர் முகம்கழுவிக்கொண்டு வரும்வரை அந்தக் காகிதச்சுருள், அவருடைய மூக்குக்கண்ணாடி சில நூல்கள் அனைத்தும் மேசையின் மீதே கிடந்தன. பின் அறையிலிருந்து திரும்பிய அம்மையார் சாளரத்தைத் திறந்தார். அந்தக் கடிதச் சுருளைக் கையில் எடுத்த போது அது ஏதோ குழந்தையின் குறும்பாகத்தான் இருக்கும் என்று அவர் கருதினார். ஆனால் அதைப் பிரித்துப் பார்த்ததும் அவர் வியப்பில் ஆழ்ந்தார். மறுபடியும் கண்ணாடியைத் தரித்துக்கொண்டு அந்த ஏட்டைப் படித்தார்.

"சீர்கெழு வெண்முத்தம்
அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு
அவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகளும் நுமக்கும்
ஆங்கு அனையளே!"

மணிகோத்த கையெழுத்தில் விளங்கிய அந்த அழகிய பாடல் தாமரை அம்மையின் உள்ளத்தை ஈர்த்தது. அந்த எழுத்தின் ஓட்டத்தில் ஒரு பெருந்தன்மை தோன்றியது. இழிதன்மையின் சுவடு எதுவும் அதில் இல்லை. என்றாலும் தமது மகளைக் குறித்து மறைமுகமாக ஏதோ அதில் இருப்பதாகவே அவருக்குப்பட்டது. வயதுவந்த பெண் ஒருத்தியைத் தன் வீட்டில் மணம் செய்விக்காமல் வைத்துக்கொண்டிருக்கும் தாயின் இயல்பான கவலையும் பரபரப்பும் அவர் முகத்தில் படர்ந்தன. வெள்ளி முடியுடைய அந்த அம்மையின் கவலை நிறைந்த முகத் தோற்றம் சிறந்தவொரு தவக் கோலத்தை நினைவூட்டியது. அம்மை தமது இளமை நினைவுகளில் ஆழ்ந்தார்.

அவர் அமர்ந்திருந்த அறையில் எளிமையும் தூய்மையும் துலங்கின. ஆடம்பரம் எதுவும் இன்றியே ஓர் இடத்தை எவ்வாறு அழகுபடுத்தலாம் என்ற உண்மைக்கு அந்த அறை ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிற்று. சுவரில் பல படங்கள் தொங்கின. ஒரு வேலைப்பாடுள்ள மரத்தட்டில் புத்தர், ஏசு, காந்தியடிகள் ஆகியோரது உருவங்களும் அதற்குப் பக்கத்தில் தாமரை அம்மையின் கணவருடைய நிழற்படமும் இருந்தன. அதனருகில் ஒரு அழகிய விளக்கு. இன்னொருபுறத்தில் குழந்தை செந்திருவின் இளமைத் தோற்றப்படம். அந்தக் குழந்தைதான் இப்படி மளமளவென்று வளர்ந்து எழில்கமழும் நங்கையாகித் தாய்க்குக் கவலையை அளித்துக்கொண்டிருந்தாள். இன்று யாரோ எழுதிவைத்த மடலும் அந்தக் கவலையைத்தான் மிகுதியாக்கிற்று. எப்படியும் மங்கையர் தாம்பிறந்த கூட்டைவிட்டு இன்னொரு கூட்டை வாழ்விக்கும் பொருட்டுச் சென்றுதானே ஆக வேண்டியிருக்கிறது! அதுதானே இயற்கையின் நியதி! இந்த எண்ணம் அம்மையின் உள்ளத்தில் தவழவும் அதன் சுமைதாங்காமல் அவர் எழுந்து நடக்கத் தொடங்கினார்.

அவருடைய மகள் செந்திருவுக்கு இயற்கையிலேயே நுண்கலைகளில் விருப்பம்மிகுதி. அவள் பாதி பின்னிய சரிகைமாலை ஒன்று ஆணியில் தொங்கிக்கொண்டிருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்கள் அனைத்தும் அவளால் எழுதப்பட்டவையே. முதல்படம் அறிவிலும் வயதிலும் முதிர்ந்த தோற்றமுடைய ஔவையுடையது. அதன்கீழ் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று செந்திருவின் தந்தை எழுதியிருந்தார். அடுத்த சித்திரத்தில் பாரிமகளிரும் கபிலரும். 'அற்றைத்திங்கள் அவ் வெண்ணிலவில்' என்று ஒரு சொற்றொடர். இன்னுமொரு ஓவியமும் கபிலருடையதே. அதன்கீழும் கண்ணப்பர் ஒரு குறிப்பு எழுதியிருந்தார். பேருரை நிகழ்த்தும் நிலையில் அன்றிருந்த கபிலருடைய தோற்றத்திற்கு அந்தச் சொற்கள் மிகவும் பொருத்தமாக இருந்தன. 'பார்ப்பன மாந்தர்காள், பகர்வது கேண்மின், பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே!' என்ற உணர்ச்சிமிக்க வாசகங்களை வரைந்திருந்தார்.

தமது கணவருடைய நினைவுகள் நெஞ்சில் நிறையவும் தாமரை அம்மாள நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டார். அவருடைய கண்கள் பனித்தன. சாதிக் கொடுமைகள் வேண்டாம் என்று தமது ஆயுள்முழுவதும் உழைத்த அவர் தம்முடைய இறுதி நாளில் ஒரு உண்மையை உணர்ந்ததாகக் கூறினார். 'ஆம், சாதி இரண்டு, ஒன்று பணக்காரச்சாதி, மற்றது ஏழைச்சாதி' 'எச்சாதி ஒழியினும் இச்சாதி ஒழியுமோ' என்று அவருடைய உள்ளம் ஏங்கிற்று.

வாயிற்புறத்தில் யாரோ வரும் ஓசை கேட்டுச் சுருட்டியிருந்த கடிதத்தை எடுத்து இழுப்பறையில் இட்டார் தாமரை. கண்களைத் துடைத்துக்கொண்டார். கையில் ஒரு அடுக்குப் புத்தகங்களுடன் துள்ளிய நடைபோட்டவாறு செந்திரு உள்ளே நுழைந்தாள். அவள் மாற்றுடை அணிந்து வருமுன்பு அம்மை இரண்டு கிண்ணங்களில் பழச்சாறு வார்த்தார். ஒரு தட்டில் சில கனித்துண்டங்கள். பழத்

தைச் சுவைத்தவாறே செந்திரு பேசினாள். 'அம்மா இந்த ஆண்டிலும் இலக்கியக் குழுவிற்கு என்னையே தலைவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எங்கள் கல்லூரியின் பிரதிநிதியாக நான் பிற மாநிலக் கல்லூரிகளுக்கும் சென்று சொற்பொழிவு ஆற்ற வேண்டியிருக்கும். 'தாயார் ஒன்றும் விடையிறுக்கவில்லை. முகத்தில் மகிழ்ச்சிக் குறிப்பும் காட்டவில்லை.

"ஏன் அம்மா, இந்தச் செய்தி உங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டவில்லையா?"

"அப்படி இல்லை செந்திரு, நீ கூறியதைக் கேட்டு ஈன்றபொழுதிலும் பெரிதுவக்கும் நிலையில் தான் இருக்கிறேன். என்றாலும் 'இவள் தந்தை எந்நோற்றான்கொல் எனும் சொல்' கேட்க உன் தந்தை இன்று இல்லையே என்று வருந்துகிறேன். மகளை அவையவத்து முந்தி இருக்கச்செய்யும் பண்பையும் எனக்கே விட்டுச் சென்றாரே என்று எண்ணும்போது நான் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறேன்"

'உண்மைதான் அம்மா, பள்ளி வகுப்புகளில் நான் சிறப்புடன் தேர்வு பெற்றதை எண்ணியே தந்தையார் எவ்வளவோ உளமகிழ்ந்திருக்கிறார்,'' செந்திருவின் குரலும் தழதழத்தது.

"என்றாலும் செந்திரு, எதிலும் அளவுடன் இருக்கவேண்டும். நுண்கலை எதுவும் உள்ளத்தைத் தொடக்கூடியது. ஓரளவு அதை அதிகம் அணுகாமலும் அகலாமலும் இருப்பதே நன்மை பயக்கும்". தாயார் எழுந்திருந்து இரவு உணவைத் தயாரிக்கச் சென்றார். மகள் சரிகை மாலையில் பட்டு இழை கோத்துப் பின்னத் தொடங்கினாள்.

மாலையில் விளக்கேற்றிய பிறகு செந்திரு தந்தையின் படத்தருகில் நின்று தாயுமானவரின் துதிப் பாடல்களைப் பாடினாள். இது அவளுடைய தந்தை கண்ணப்பர் ஏற்படுத்தி வைத்த வழக்கம். அவர் தாயுமானவர், பாடல்களில் மிகுந்த விருப்பம் உள்ளவர். மகள் அவர்களது பாடல்களை உள்ள முருகப்பாடுவதைத் தந்தை உடன் இருந்து கேட்டு உணர்ச்சிப் பெருக்கினால் கண்ணீர் பெருக்குவார். அப்போதெல்லாம் தாமரை அம்மாளும் உடன் கலந்துகொள்ளுவதுண்டு.

பின்னர் செந்திரு அன்றைய பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தபோது தாயார் மகளை உணவருந்த அழைத்தார். உண்கலங்களிலே சோறு வட்டிக்கப்பட்டிருந்தது. நடுவே எளிய உணவு வகைகள். மிளகுநீர், பசலைக்கீரை, வெள்ளரிக்காய், மோர், இவ்வளவே தான். இருவரும் சேர்ந்து உட்கார்ந்து உரையாடிய வண்ணமே உணவருந்தினர்.

அடுத்த சில நாட்கள் மகளை உன்னிப்பாகக் கவனித்தார் தாயார். அவளுடைய நடத்தையில் வேறுபாடு எதுவும் காணப்படவில்லை. எனவே தாம்கொண்ட ஐயப்பாட்டிற்கு மிகவும் வருந்தினார் தாயார். இரண்டு வாரங்கள் கழிந்தன. அன்று மாலை அம்மையார் வீட்டின் கதவை நெருங்கிய பொழுது பூட்டில் ஒரு காகிதச் சுருளைக் கண்டார். வெறுப்பும் எரிச்சலும் அவருடைய உள்ளத்தில் நிறைந்தன. என்றாலும் அந்தஏட்டைப் படித்ததும் அதில் உள்ள கைஎழுத்தும் தெள்ளிய சுவையுடைய பாடலும் அவர் உளளம் இனந்தெரியாத மகிழ்ச்சியை அடைந்தது. பாடல் பொன்றோலான போர்வாளைப்போல மினனிற்று.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு
அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம்
என்செய்யும்?
நினையுங்கால் நும்மகளும் நுமக்கும் ஆங்கு
அனையளே!"

இனி இதை முற்றவிடக்கூடாதென்று முடிவு செய்துகொண்டார் அம்மையார். இரண்டு ஏடுகளையும் இழுப்பறையில் வைத்துக் காப்பிட்டார். வாயிலில் ஏதோ குரல் கேட்டது.

"யார் அங்கே?"

"நான் தான் 'மா, சின்னையன்.''

"வா சின்னையா, காலிலே என்ன கட்டு?'' தாமரை வினவினார்.

"தோட்டத்தில் வேலை செய்கையில் காலிலே மண்வெட்டி பட்டுப் புண்ணாகிவிட்டதம்மா. மருத்துவமனைக்குப் போயிருந்தேன். அங்கே கதிர்ஒளிப்படம் எடுத்துக் கால் விரலில் முறிவு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தார்கள். இன்று மருத்துவருக்கு ஓய்வு நாளாம். புதன்கிழமைகளில் அவர் வீட்டிலிருப்பாராம். அவரைப் பார்த்துத் திரும்பினேன். வழியில் உங்களிடமும் வேலை இருந்தது, அதனால் வந்தேன்.''

"என்ன வேண்டும்?''

"ஒன்றுமில்லை அம்மா. என்னுடைய கோழிகள் தோல்முட்டை இடுகின்றன. அவை குஞ்சு பொரிக்கவும் பயன்படுவதில்லை. உண்ணவும்சுவையாக இல்லை. என்னசெய்யலாம் என்று கேட்டுப்போக வந்தேன்.''

"கோழிகளுக்குச் சுண்ணாம்புத் தரையில் தீனி வைக்கவேண்டும். இல்லாவிட்டால் சோளத்துடன் சுண்ணாம்புத்தூளைக் கலந்தும் போடலாம். ஒருவாரம் இப்படிச் செய்துபார், குணமாகாவிட்டால் மறுபடியும் வந்து சொல்லு!''

"சரி அம்மா,'' சின்னையன் புறப்பட்டான்.

புதன்கிழமை, புதன்கிழமை' தாமரை அம்மாள் எதையோ நினைவுகூர்ந்தார். முன்பொரு தடவையும் புதன்கிழமையன்று தான் பூட்டில் ஏட்டுச் சுருள் இருந்தது. "சற்று நில் சின்னையா, தாகத்துக்குக் கொஞ்சம் மோர் தருவேன்.'' அம்மையார் மோர் கொண்டு வந்தார்.

"சரி அம்மா''. கறிவேப்பிலை மணமுள்ள அந்தமோரைச் சுவைத்துக் குடித்தான் சின்னையன்.

"ஏனப்பா, எதிர் வீட்டிலுள்ள மருத்துவர் மிகவும் தலைக்கனம் உடையவரோ''?

"இல்லை அம்மா அவர் மிகுந்த நல்லவராயிற்றே. நிறையப் படித்துப் பட்டம் பெற்றவர், செல்வம் உடையவர், என்றாலும் ஏழைகளிடம் அன்புடன் பழகுகிறார். எளியவர்களுக்கு இலவசமாக மருந்து தருகிறார். என்மாதிரி ஏழைகளுக்கு கதிர் ஒளிப்படம் யார் அம்மா எடுப்பார்கள்''?

"அதற்கில்லையப்பா, அன்றொரு நாள் எனக்குத் தலைநோ: என்று மருந்து கேட்டனுப்பினேன். அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை.''

"அது உண்மைதான் அம்மா! நோயாளியைப் பாராமல் அவர் மருந்து தருவதில்லை. நகரமுடியாத நோயாளிகளை அவரே நேரில் சென்று கவனிக்கிறார். என் குடிசைக்குக்கூட அவர் வந்திருந்தாரம்மா. எங்கள் தெருமுனையில்

உள்ள முதியவர் பள்ளிக்கு வாரம் ஒருமுறை வந்து சுகாதார வழிகளைச் சொல்லுகிறாரம்மா''. சின்னையன் விடைபெற்றுத் திரும்பிப் போனான்.

* * *

2

"செந்திரு, இன்று நீ சரியாகச் சாப்பிடவே இல்லை. உண்கலத்தில் அப்படியே சோறு மிகுந்து கிடக்கிறது'' தாயார் மகளைக் கடிந்து கொண்டார்.

"ஒன்றுமில்லை அம்மா, சரியான பசியில்லை.''

"அப்படியானால் வெறும் நீர் மட்டும் அருந்திவிட்டுப் பட்டினி இருக்கவேண்டும். சோற்றை வீணாக்கக்கூடாது. சென்ற ஒரு முறையாகவே நீ சரியாகச்சாப்பிடுவதில்லை. உடம்பும் இளைத்திருக்கிறது. படிப்பும் அதிகம் இல்லையே! தேர்வும் அண்மையில் இல்லை. தேர்வுக்காகவும் சிரமப்பட்டுப் படிப்பது உன் வழக்கம் அல்லவே. வருகிற கிழமை நல்லதொரு மருத்துவரிடம் சென்று கேட்கவேண்டும்.''

தாயார் மகளுடைய முகத்தை ஊடுருவிப் பார்த்தார். அதிலே ஒரு மாறுதலையும் காண இயலவில்லை. இன்று மாலை சின்னையன் வந்திருந்தான். எதிர் வீட்டில் இருக்கும் மருத்துவர் நல்ல பண்புள்ளவர் என்று கூறினான். நிறைய படித்து ஆராய்ச்சிகள் செய்தவராம்!

மகளின் முகத்தில் செம்மை படர்ந்தது. உணர்ச்சிகளை வலிந்து அடக்கிக்கொள்ளும் தோற்றம் காணப்பட்டது. தாயார் அதைக் கூர்ந்து கவனித்தார்.

"நான்கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன் அம்மா. அவர் ஒருமுறை எங்கள் இலக்கிய மன்றத்தில் தலைமை வகித்திருக்கிறார். நான் அவரை வரவேற்றுப் பேசினேன். அவர் எனது புலமையைப் பாராட்டியதுடன் நகைச்சுவை ததும்பப் பேசினார்.''

மகளுடைய முகத்தில்தோன்றிய உற்சாகத்தைத் தாயார் அனுபவித்தார். அதன் பொருள் அவருக்கு விளங்கியது. மகள் தொடர்ந்து கூறினாள். "பெரும்பாலான இலக்கியக் குழுக்கள் சமுகத்தின் உயர்நிலையில் இருப்பவர்களைத் தங்கள் மன்றத்திற்கு அழைக்கின்றன. அங்கே வருகிற பெரியவர்களுக்கு இலக்கியத்துடன் ஒரு தொடர்பும் இருப்பதில்லை. இன்று நானும் அந்த நிலையில்தான் இருக்கிறேன. ஆனால் இன்று உங்கள் தலைவியின் சொற்பொழிவைக் கேட்டபிறகு இலக்கியத்தின் உயர் தன்மையையும் வாழ்க்கையில் அதன் தேவையையும் உணர்ந்து கொண்டுவிட்டேன். இன்னொரு தடவை இங்கு வரநேரிட்டால் இந்தப்பணிக்குத் தகுதி உடையவனாக இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்!'' தமது அறியாமையை எடுத்துக்கூறி அவர் எங்களுடைய மதிப்பிற்குரியவராகிவிட்டார். செந்திரு பேசி முடித்தாள்.

அடுத்த புதன்கிழமை வந்தது. அன்று காலையில் அலுவலுக்குச் சென்ற தாமரை அம்மாள் முற்பகலிலேயே வீடு திரும்பினார். வீட்டின் கொல்லைவழியாக வாயிற்புறத்திறகு வந்து வாயில் கதவைப் பூட்டினார். பின்புறத்தின் வழியாகவே வீட்டினுள் சென்று சாளரத்தைத் திறந்து நின்று எதையோ எதிர்நோக்கினார். பிற்பகல் மூன்று மணி அளவில் எதிர்வீட்டிலிருந்து இளைஞன் ஒருவன் வெளிப்பட்டான். உடனே தாமரை அம்மாள் பின்வழியாக வீட்டைவிட்டு வெளியேறினார். அந்த இளைஞன் தமது வீட்டின் கதவை நெருங்கும் நேரத்தில் வேலியின் படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார் தாமரை. பொங்கும் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நின்றார்.

"வணக்கம்''

"வணக்கம் அம்மா'', அந்த இளைஞனின் கூப்பிய கைகள் நடுங்கின. முகம் வெளிறிப்போய்க் கிடந்தது.

"என்ன வேலையாக வந்தீர்கள்?''

"தங்களைக் காணத்தான் வந்தேன். பின்னொரு சமயம் பார்ப்பேன்!'' இளைஞன் நழுவினான்.

"நில்லுங்கள் அங்கே'' சிலம்பின் செல்வியைப்போல் சீறினார் செந்திருவின் தாய். "இந்தச் செய்கை இழிவானது என்று ஏன் உங்களுக்குத் தோன்றவில்லை? நீங்கள் செல்வமுடையவராக இருக்கலாம். ஆனால் நாங்கள் கண்ணியம் இழந்தவர்களல்லர். வாலிபனின் முகத்தில் பணிவும், தயக்கமும், கழிவிரக்கமும் தோன்றின. தாமரை அம்மாள் கதவைத் திறந்தார். இழிவு காட்டும் முகப்பாங்குடன் வீட்டினுள் செல்ல முனைந்தார்.

இளைஞன் துணிவை மேற்கொண்டான். "நான் நிற்க மாத்திரம் வரவில்லை. உத்தரவுகொடுத்

முகவரி மாற்றம்

"மன்றம்"

"மன்றம்" அச்சகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருப்பதால் "மன்றம்" இதழுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மணியாடர்கள் முதலியன புதிய முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

"மன்றம்"
49, வேளாளத் தெரு,
அமைந்தகரை,
சென்னை-29.

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அனுப்பப்படும் தனிப்பட்ட கடிதங்கள்,

இரா. நெடுஞ்செழியன்
8, இலட்சுமி டாக்கீஸ் தெரு,
சென்னை-30.

என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

தால் உங்களிடம் என் நிலையையும் வரலாற்றையும் கூறுகிறேன்''

தாமரை அம்மையின் முகம் அனலைக் கக்கிற்று. அவர் ஒன்றும் பேசவில்லை. இளைஞன் அவரைப் பின் தொடர்ந்தான்.

உள்ளே சென்ற இளைஞன் செல்வம் பேசத்தொடங்கினான். "அம்மா நான் செய்தது தவறு. அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் அதற்கு என்னுடைய வயதும் சூழ்நிலையும் எனது இயல்பான குறும்புத்தனமும்தான் காரணங்கள். தீயநோக்கம் ஏதும் என் உள்ளத்தில் இல்லை என்பதை நீங்கள் நம்பலாம். நான் தங்களைக் குறித்துக்கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மையைக் கூறப்போனால் என்னுடைய இலக்கியச் சுவையை வளர்த்ததே உங்கள் மகள் செந்திருதான். தங்களை நேரில் காணப் பலமுறை முயன்றேன். அன்று தலை நோய்க்கு மருந்து கேட்டு அனுப்பினீர்களாம். எனது மருத்துவ மனையில் நோயாளிகளின் கூட்டம் மிகுதியாக இருந்தது. சிறிது நேரம் பொறுத்து நானே உங்கள் இல்லத்திற்கு வந்தேன். ஆனால் வீடு பூட்டியிருந்தது. தாங்கள் செல்வந்தர்களைப் பழிப்பவர் என்றும் கேள்விப்பட்டேன். தங்களைக் காணும்தோறும் என் உள்ளத்தால் தங்களுக்கு வணக்கம் செலுத்தியிருக்கிறேன்.

நான் செல்வந்தன் இல்லை அம்மா; என்னிடமுள்ள தொழில் கல்வி ஒன்றுதான் எனது செல்வம். அதுவும் மலேயா இரப்பர் தோட்டத்தில் என் தந்தை தமது குருதியைய வியர்வையாக வடித்ததால் வந்தது. என் தந்தை ஒரு தோட்டத் தொழிலாளி. நானும் அவருக்குத் துணையாகக் கைவருந்தி உழைத்திருக்கிறேன். மெய்வருந்தி உழைக்கத் தயாராயுள்ள தமிழர்களுக்கு வெளிநாடு சோறுபோடுகிறது. நம்நாட்டில் தான் உழைப்புக்கு வாய்ப்புமில்லை விலையுமில்லை.'' செல்வம் வெகு நேரம் பேசினான். அவனுடைய நல்ல பண்பு அவனது வாக்கில் வெளிப்பட்டது. தாமரை, செல்வத்தின் சொல்வன்மையினால் ஈர்க்கப்பட்டார்.

யாரோ வரும் ஓசை கேட்டுப் பேச்சை நிறுத்தினான் செல்வம். தன் வீட்டில் மருத்துவர் வந்திருப்பதைக் கண்டு செந்திரு அச்சமுற்றாள். தாயாரின் முகத்தை நோக்கினாள். பிறகு வியப்புற்றாள். பின்னர் வணக்கம் செலுத்தினாள். உள்ளே சென்ற செந்திருவைத் தாயார் விளித்தார்; "செந்திரு, இவரை நீ அறிவாயா?"

செந்திரு சிறிது தயங்கினாள்; "அறிவேன்''

"இவருடன் ஒன்றுபட்டு வாழ்வதில் உனக்கு விருப்பமுண்டா? வெட்கப்படாமல் சொல்.''

மகள் விடையிறுக்கவில்லை. தலையைக் குனிந்துகொண்டாள்.

ஆணியில் மாட்டியிருந்த சரிகை மாலையை எடுத்தார் தாமரை அம்மாள். "இந்தா, இதை உன் தந்தையின் படத்திற்கு முன்பு நின்று செல்வத்திற்கு அணிவி!''

செந்திரு உயிருள்ள பார்வையைப் போல இயங்கினாள். ஆரத்தைச் செல்வத்தின் கழுத்தில் இட்டாள். இருவரும் அம்மையாரை வணங்கினார்கள். பின்னர் கண்ணப்பரின் படத்திற்குத் தெண்டனிட்டனர். இதற்குள் தாமரை அம்மாள் இரு கிண்ணங்களில் பாலை நிரப்பி இருவரிடமும் கொடுத்தார். ஒரு தட்டில் கொஞ்சம் பழம்; தேங்காய், மலர்கள் இவைகளை வைத்துத் தன் மகளிடம் கொடுத்தார், "இனி உன் வீடு எதிர்வீடாகும். நீயும் செல்வமும் மனமொத்து வாழுங்கள்'', என்று உளமார வாழ்த்தினார். அவரது குரல் கம்மியது. மணமக்கள் பாலை அருந்தினர்.

வேலியின் படலைநீக்கிக்கொண்டு மகளும் மருமகனும் தங்கள் மனைக்குப் போவதைப் பார்த்தவாறு சில கணங்கள் நின்றார் அம்மையார். இதுவரை அடங்கிநின்ற கண்ணீர் களகளவென்று பெருகிற்று. செல்வம் அன்றுமாலை விட்டுச்சென்றிருந்த மூன்றாவது ஏட்டைப் பிரித்துப் படித்தார்.

''ஏற்புணர் இல்லிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு
அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகளும் நுமக்கும்
ஆங்கு அனையளே!''

'எங்கோ வெகுதொலைவிலிருந்து நாயனத்தின்மூலம் வெளிவந்த குறிஞ்சிப் பண்ணின் இன்னொலி கலிமொழியின் பொருளை மெய்ப்படுத்திற்று.

❋

கல்கத்தா மேயரும் 'கண்கட்டு' வித்தையும்!

போக்குவரத்து நிறைய உள்ள சாலைகள் வழியே — ஆறுமைல்— கண்ணைக் கட்டிக்கொண்டு, ஒருவன் கார் ஓட்டினானும், கல்கத்தாவில்!

எந்தவித விபத்தும் நேரவில்லையாம், பாதையில்!

இருமருங்கும், மக்கள் வெள்ளம் கூடி வேடிக்கை பார்த்ததாம்!

"அதிசயம்! அதிசயம்!'' என்று தலைப்பிட்டு, பத்திரிகைகள் பல எழுதியிருக்கின்றன!

அந்த 'அதிசய'த்தைச் செய்து காட்டியவன், ஒரு மந்திரவாதியாம்!

யாரையும், கொல்லாமல், தானும் சாகாமல், ஆறு மைல் தூரம் காரோட்ட அவனால் முடிந்ததற்குக் காரணம், அவனது திறமையா மந்திர சக்தியா, வேடிக்கை பார்ப்பதற்கென்று சாலையின் இருமருங்கிலும் நின்றிருந்த மக்கள் தம் முயற்சியா, அல்லது இப்படியொரு நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது என்று முன்கூட்டியே தெரிந்து, தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்வதற்காக, அனைவரும் வேறு சாலைகள் வழியே சென்றுவிட்டனரா?

சிந்தனைக்குரிய கேள்விதான்!

அதோடு மற்றொரு கேள்வி— நியாயமானதும் கூட!

"ஏனிந்த விபரீத விளையாட்டு?''

இந்த 'விளையாட்டின்' கதாநாயகன் அந்தக் காரோட்டியென்றால் 'கதாநாயக'னுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுகின்ற பாத்திரத்தை ஏற்றுக்கொண்டவர், சாதாரண மனிதரல்ல—கல்கத்தாவின் மேயர்—அந்த நகரத்தின் முதல் மனிதர்!

அவர்தான், அந்தக் காரோட்டியின் கண்களைக் கட்டிவிட்டாராம்!

"இப்படி, டிரைவர்களின் கண்களைக் கட்டிவிட்டு, யாரையும் கொல்லாமல், தானும் சாகாமல், அவன் செல்லுகிறானா என்று பார்ப்பது மேயர்களின் பணிகளிலே ஒன்றாக இருக்குமோ?'' என்று கேலியாகக் கேட்கிறது, "டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற இதழ்!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.